3305



# தீனபந்து ஆண்ட்ரூஸ்

தி. ஜ. ர

PRESENTED BY:
V. PR. PL. M.
...VISWANATHAN CHETTIAR
PAGANERI.

அல்லயன்ஸ்
கம்பெனி,
மயிலாப்பூர்,
சென்னை.

# விஜயா

டாக்டர் சரத் சந்த்ர சட்டர்ஜி எழுதிய நாவல்களுள் முதன்மையானது. "இந்திரா" "ரஜனி" என்னும் பங்கிம் சந்த்ரர் நாவல்களை மொழிபெயர்த்த ஸ்ரீ S. குருஸ்வாமி பி. ஏ., தமிழில் மொழிபெயர்த்தது.

—— ரூ. 1—8—0 ——

சிறப்புரைகளிற் சில

ஜோதி :— * வாசிப்பதற்குச் சுவையா யிருக்கிறது. ஸ்ரீ குருஸ்வாமி, இதைச் சுவை குன்றாமல் மொழிபெயர்த்திருக்கிறார்.

கலைமகள் :— * இந்நவீனம் படிப்பதற்கு மிக்க ஸ்வாரஸ்யமா யிருக்கிறது. ஒவ்வொரு புத்தகாலயத்திலும் வைப்பதற்கேற்ற நூல்.

**The Mail:**— The style of the translation is good & expressive and the story is free flowing.

ஜயபாரதி :— * மொழிபெயர்ப்பு நடை சிறப்பா யிருப்பதைக் குறிப்பிடவேண்டும். சரளமான பாஷையில், சொந்தத் தமிழ்க் கதைபோல், 'அந்நிய' சொற்றொடர் இல்லாமல் மொழிபெயர்த்திருப்பதை, தமிழ் இலக்கியத்திற்கு ஒரு தொண்டெனக் கூற வேண்டும். புஸ்தகம் அச்சுப்பிழையில்லாமல் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. நல்ல பைண்ட் கட்டடத்திலிருக்கும் இப்புத்தகம் பிரசுராலயத்திற்குப் பெருமை யளிப்பதாகும்.

குமரன் :— * ஆடவரும் பெண்டிரும் படித்து இன்புறலாம். இதுமாதிரி வங்காள மொழியிலுள்ள பல இனிய கதைகளையும், நாவல்களையும் மொழிபெயர்த்துத் தமிழுலகுக்குத் தந்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் தொண்டு பெரிதும் போற்றத்தக்கது.

பாரத மணி :— * ஸ்ரீ குருஸ்வாமியின் மொழிபெயர்ப்பு வாசிப்பதற்கு எளிதாகவும் நல்ல ஓட்டம் கொண்டதாகவும் இருக்கிறது. கலிக்கோ பைண்டில், இவ்வளவு அழகாக, ரூ. 1—8—0 விலைக்கு 300-பக்கங்கள் கொடுத்திருப்பது அல்லயன்ஸ் கம்பெனியாரின் சிறப்பாகும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

பாகனேரி.

# தீனபந்து ஆண்ட்ரூஸ்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

பங்கிம் சந்த்ரர் நூல்களுள் இதுவரை பதினான்கு (14) மொழி பெயர்க்கப்பட்டுள் ளன. ஏனைய நூல்களும் விரைவில் வெளிவரும்.

# தீனபந்து ஆண்ட்ரூஸ்

திரு. வி. க

திரு. ஐ. ர

எழுதியது

சுதேசமித்திரன் பத்திராதிபர்
ஸ்ரீமான் சீ. ஆர். ஸ்ரீநிவாசன், பி. ஏ.,
அவர்கள் முன்னுரை கொண்டது.

அல்லயன்ஸ் கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை.

காபிரைட்]

0—12—0

எல்லாத்
தேசிய நூல்களும்
எங்களிடம்
கிடைக்கும்.

மாடல் அச்சுக்கூடம். — (194076-1-11.)

# முன்னுரை

இந்திய சரித்திரத்தில் இந்த தலை முறைக்கு தனி சிறப்புண்டு. தியாகமும் சேவையும் தழைத்த காலம் இது. இப்படிக் கால தர்மத்தையே மாற்றிய பெரியோர்களில் தீனபந்துவும் ஒருவர். அவருக்கும் பிறருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. ஆளும் ஜாதியில் பிறந்தார் அவர்; ஆளப்படுவோரை ஆதரித்தார். அவருடைய வாழ்வின் விசேஷத்தைக் குறிப்பிட இது ஒன்றே போதுமானது. இனம் இனத்தைக் காக்கும் என்று சொல்வார்கள். இனத்தில் அவருக்குப் பெருமையுண்டு; ஆனால் குணத்தளவு பெருமையேயொழியக் குறையளவில்லை. நல்ல படிப்பாளி; கல்லூரியில் கற்றது இயற்கை அறிவையும் குணங்களையும் பரிமளிக்கச் செய்தது. ஒழுக்கம் நிறைந்தவர்; பிறரிடமும் ஒழுக்கம் ஓங்கப் பிரயாசைப்பட்டார். அன்பில் சிறந்தவர்: ஜாதி மத பேதமின்றி கரைபுரண்டோடியது அவரது அன்பு. மதத்தில் பற்றுண்டு; பற்று, பித்தாக மாறவில்லை; பிற மதத்தினிடத்தில் துவேஷம் காணவில்லை. தீனர்களுக்கு என்றும் எங்கும் தஞ்சம் அளித்தார்; தீனபந்து என்று சுதாவாக அவருக்குப் பெயர் ஏற்பட்டது.

ஆங்கிலேயராகப் பிறந்து இந்தியாவுக்கு இந்தியர்களை விடச் சேவை செய்வது அபூர்வமானது, ஆச்சர்யமானது. அவருடைய சரிதை குன்றின்மேலிட்ட தீபம்போல் பிரகாசிக்கிறது; வாழ்க்கைக்கு வழிகாட்டியாகத் துலங்குகிறது. அதை அனைவரும் அறிய இப்புத்தகம் உதவும்.

30-6-1940 — சி. ஆர். ஸ்ரீநிவாசன்.

## பொருளடக்கம்


| அத்தியாயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இந்தியா அழைக்கிறது | .... | 1 |
| 2. | ஆரம்ப சேவை | .... | 8 |
| 3. | காந்திஜி சந்திப்பு | .... | 14 |
| 4. | எங்கும் விடுதலை | .... | 22 |
| 5. | ஜலியன்வாலா | .... | 33 |
| 6. | எண்ணற்ற சேவைகள் | .... | 40 |
| 7. | குணக்குன்று | .... | 45 |
| 8. | இந்தியாவினிடம் அன்பு | .... | 52 |
| 9. | கடைசி நாட்கள் | .... | 57 |
| 10. | தேசத்தின் துயரம் | .... | 64 |
| 11. | அவர் நூல்கள் | .... | 72 |
| 12. | அமுத மொழிகள் | .... | 76 |


முகப்புப் படம்

தீனபந்து ஆண்ட்ரூஸ்

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம்,
பாகனேரி.



தீனபந்து ஆண்ட்ரூஸ்

# தீனபந்து
# ஆண்ட்ரூஸ்

---

## அத்தியாயம் 1

### ‘இந்தியா அழைக்கிறது’

மகாத்மா காந்தியின் சத்யாக்ரக இயக்கம் கண்டிப்பாக வெற்றி யடையும் என்பதற்குச் சான்று போன்றவர் தீனபந்து ஆண்ட்ரூஸ். மனிதர்களின் உள்ளங்கள் சந்திக்கும்போது, ஜாதியும் மதமும் நிறமும் பிற வேற்றுமையும் எல்லாம் மாய்ந்துபோகும் என்பதற்கு ருஜு அவரது உத்தம வாழ்க்கை.

இந்தியாவுக்கு ஆங்கில ஆட்சியால் ஏற் பட்ட தீங்குகள் அனந்த மிருக்கலாம். ஆனால் தனிப்பட்ட பல ஆங்கிலேயர்கள் இந்நாட்டுக் குச் செய்த சேவைகளையும் உபகாரங்களையும் நாம் மறக்க முடியாது. அவர்களி லெல்லாம் தலைசிறந்தவர் ஸ்ரீ ஸி. எப். ஆண்ட்ரூஸ்.

ஸ்ரீ ஆண்ட்ரூஸ், 1871-ஆம் ஸூ பிப்ரவரிமீ 12உ இங்கிலாந்திலுள்ள கார்லிஸ்லீ என்னும் நகரில் ஜனித்தார். ஜான் எட்வின் ஆண்ட்ரூஸ் இவர் தந்தையார்; மேரி சார்லட் ஆண்ட்ரூஸ் இவர் அன்னையார்.

இளமைப் பருவத்திலே பக்கிங்ஹாம் கிங் எட்வர்ட் கலாசாலையிலும், பின்னர் கேம்பிரிட்ஜ் பெம்ப்ரோக் காலேஜிலும் இவர் கல்வி பயின்றார்.

காலேஜ் படிப்பிலே மகா சூடிகை காட்டினார். மூன்று பாடங்களிலே முதன்மையாய்த் தேறினார். அவரது புத்திக்கூர்மை கண்டு, 1896-ஆம் வருஷம் அவரை பெம்ப்ரோக் காலேஜ் மிஷனின் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். 1899-ஆம் வருஷம் ஒரு புரொபஸராக அதே காலேஜில் பதவி பெற்றார். அதற்கடுத்த வருஷம் கேம்பிரிட்ஜ் வெஸ்ட்காட் ஹவுஸுக்கு உதவி பிரின்ஸிபால் ஆனார்.

தீனபந்து ஆண்ட்ரூஸின் ஹ்ருதயம் உணர்ச்சி நிரம்பியது என்பதை அவரது பிற்கால வாழ்க்கை நமக்கு நிரூபித்துவிட்டது. அவரது மதிநுட்பம், காலேஜ் படிப்பின்

போதே பிரகாசம் அடைந்துவிட்டது. மிக்க உயர்ந்த பதவியும் புகழும் அடையக்கூடியவர் என்பதை அந்த வாலிப நாட்களின் வாழ்வே சூசகம் காட்டியது.

ஆனால், 1904-ஆம் ஸ்ரீ அவர் டில்லிக்கு வந்து ஸ்டீபன்ஸ் காலேஜில் ஒரு புரொபஸ ராய்ச் சேர்ந்தபோதுதான், அவரது உண்மை யான வாழ்க்கை தொடங்கிற்று.

மிகச் சிறுபிராயத்திலேயே, இந்தியாமீது தீனபந்துவுக்கு ஓர் ஆசை விழுந்திருந்தது. ஒரு நாள் தன் தாயிடம் சென்று, "அம்மா, நான் பெரியவனாகும்போது, இந்தியாவில் போய் வசிக்கப் போகிறேன். இந்தியாவில் எல்லோரும் அரிசிச் சாதந்தான் சாப்பிடுவதாக அப்பா சொல்லுகிறார். ஆகையால் நான் அங்கே போவதற்கு முன், அரிசிச் சாதம் சாப்பிட்டுப் பழகவேண்டாமா? தினந்தோறும் எனக்குக் கொஞ்சம் அரிசிச் சாதம் போடேன்" என்று கூறினார்.

தாய் நகைத்துவிட்டு, "போடா அசட்டுப் பையா" என்று செல்லமாய்க் கூறினாள். ஆனால், அந்த நகைப்புக்குப் பின்னே, அவள் குரலிலே, ஒரு கவலையும், ஒரு துயரமும் கலந்திருந்தது.

இந்தப் பிள்ளை பெரியவனாகும்போது, கட்டாயம் தங்களைப் பிரிந்து, கண்காணாத் தேசமான இந்தியாவுக்கு ஓடிப்போய்த்தான் தீருவான் என்ற கவலை அவளுக்கு உண்டாகிவிட்டது.

தீனபந்து ஆண்ட்ரூஸ், கேம்பிரிட்ஜ் கல்லூரியில் படிக்கையிலே, அவருக்கு பேஸில் வெஸ்ட்காட் என்ற ஒரு நண்பர் உண்டு. டர்ஹாம் பிஷப் வெஸ்ட்காட்டின் கடைசிப் புதல்வர் அந்த பேஸில். பிஷப் வெஸ்ட்காட், தமது நான்கு புத்திரர்களையும் இந்தியாவில் சேவை செய்ய அனுப்பினர். அவர் இங்கிலாந்திலே பெரிய கல்விமான். அவருக்கு என்னவோ இந்தியாவிடம் பரம மோஹம் விழுந்தது. இந்திய மதக்கிரந்தங்களையெல்லாம் அவர் நன்கு படித்திருந்தார். அவருக்கு ஓர் ஆசை உண்டு. முற்றிலும் இந்திய வேத வேதாந்தங்களையே ஆராயும் ஓர் ஆசிரமத்தை இந்தியாவில் நிறுவவேண்டும்; அதன் மூலம் மேல்நாட்டுச் சமய தத்துவங்களையும் கீழ்நாட்டுச் சமய தத்துவங்களையும் இணைக்கும் ஒரு சமரஸ மார்க்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் - இதுதான் அந்த பிஷப்பின் ஆசை. இந்தியாவிடம் இம்மாதிரி வாஞ்சை கொண்டிருந்த அவ

ருடைய நான்கு புதல்வர்களும், இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள்.

யாவரினும் இளைய கடைசிப் புத்திரன் பேஸில், டில்லி ஸ்டீபன்ஸ் காலேஜில் புரொபஸராய் வேலை பார்த்தார். அச்சமயம் டில்லியில் காலரா மிகக் கடுமையாய்த் தோன்றியது. பேஸிலுக்கு உடம்பு அசௌக்கியமாய், மிகத் தள்ளாமையோ டிருந்தும், காலராவால் தவித்த ஒரு நோயாளியின் பக்கத்திலே உட்கார்ந்து, திடமும் தேறுதலும் கூற ஓடினார். அடுத்த நாள் அந்தக் கொடிய கொள்ளைநோய், தயாளு பேஸிலுக்கும் கண்டு, அவர் உயிரைப் பருகி விட்டது. இந்த வீரத்தியாகியின் ஸ்தானத்தை ஏற்கவே, தீனபந்து ஆண்ட்ரூஸ் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்.

பிஷப் வெஸ்ட்காட்டின் மற்றோர் புதல்வர் பாஸ் வெஸ்ட்காட்; இப்போது இவர் கல்கத்தா பிஷப்பா யிருக்கிறார். வெஸ்ட்காட் சகோதரர்களில் அவர் ஒருவர்தான் இன்று உயிருடனிருப்பவர். ஸ்ரீ ஆண்ட்ரூஸுக்கும் இவருக்கும் கடைசிவரையில் அத்தியந்த நட்பு இருந்து வந்தது.

தீனபந்து ஆண்ட்ரூஸ், இந்தியாவுக்கு வரத் தீர்மானித்தபோது, பல நண்பர்கள் அவரைத் தடுத்தார்கள். கல்வியிலே முதல் தரமாய்த் தேறி, வெற்றிகரமாய் வாழ்க்கை ஆரம்பமாகி யிருக்கும் ஆண்ட்ரூஸ், இந்தியா வுக்கு ஏன் வரவேண்டும்?

"பிரிட்டனிலேயே தங்கியிருந்தால், கேம் பிரிட்ஜ் யூனிவர்ஸிடியிலே புரொபஸர்களுக் கெல்லாம் தலைமைப் புரொபஸராகி விடலாம். அரசியலிலே சேர்ந்தால், பிரதம மந்திரிகூட ஆகிவிடலாம்" என்றெல்லாம் நண்பர்கள் சொல்லிப் பார்த்தார்கள்.

ஒரு பெரிய ஆங்கிலப் பாதிரியார், "உங் களுக்கிருக்கும் அருமையான யோக்கியதாம்சங் களுக்கு, நீங்கள் இங்கேயே யிருந்தால், இங்கி லாந்து சர்ச்சிலேயே மகா உன்னதமான பிஷப் பதவியை நீங்கள் பெறலாம். இந்தியா வுக்குச் செல்வதால் அதையன்றோ இழக்கி றீர்கள்?" என்றார்.

ஸ்ரீ ஆண்ட்ரூஸ் எதற்கும் மசியவில்லை. நண்பர்களின் வாதத்தையெல்லாம் "இந்தியா அழைக்கிறது" என்ற இரண்டே வார்த்தைகள்

கொண்ட உறுதியான பதிலால் அடக்கி விட்டார்.

தெரிந்தோ தெரியாமலோ தம் நாட்டவர் இந்தியாவுக்குத் தீங்கு இழைத்துவிட்டார்கள் என்பதை அவர் அறிந்துகொண்டார். அதற்குப் பிராயச்சித்தம் செய்யத் தீர்மானங் கொண்டார். அவர் எப்படிப் பின் தங்க முடியும்? அவர் ஓர் உண்மையான தபஸ்வி யல்லவா?

## அத்தியாயம் 2

## ஆரம்ப சேவை

இங்கிலாந்தி லிருக்கையிலே ஸ்ரீ ஆண்ட்ரூஸுக்கு ஒரு பலவீன முண்டு. சத்காரியம் எதையாவது செய்துகொண்டே யிருப்பார்; சற்றும் ஓய்வு கொள்ளமாட்டார். லண்டன் ஏழைமக்களுக்குச் சேவை செய்து கொண்டிருப்பார். "இது ஆண்டவன் பணி யல்லவா? எனது நேரம் பூராவையும் இதிலே செலவழித்தாகவேண்டும்" என்று முடிவு செய்து, இளைப்பாறவோ சிறிது நேரம் பகவானைப் பிரார்த்திக்கவோகூட ஓய் வெடுத்துக் கொள்வதில்லை.

இந்தியாவுக்கு வந்தவுடனே, இரு நாடு களுக்குமுள்ள வேற்றுமையை அவர் கண்டார். இங்கிலாந்திலே எல்லாம் ஓட்டமும் பிடியுமாய்த் தான் வாழ்வு. இங்கே அமைதியும் ஓய்வும் உண்டு; தெய்வ வணக்கத்துக்கும் பிரார்த் தனைக்கும் நேரமுண்டு.

புரொபஸர் சுசீல் குமார ருத்ராவின் நட்பை ஆண்ட்ரூஸ் பெற்றார். அவருடைய

அமைதி நிரம்பிய சீலவாழ்க்கை, ஆண்ட்ரூஸின் உள்ளத்தைக் கவர்ந்தது.

ஆண்ட்ரூஸ் எப்பொழுது பார்த்தாலும் வேலை செய்யத் துடித்துக்கொண் டிருந்ததைக் கண்ட ருத்ரா, ஆண்ட்ரூஸை நோக்கி, "இயேசு நாதரே நாம் ஓய்வெடுத்துக்கொள்வது அவசிய மென்று கருதியதாக நான் நிச்சயமாய் நம்புகிறேன்" என்று சொல்லி, இவரை ரஜா நாட்களிலெல்லாம் ஹிமாலய மலைக்கு அழைத்துச் செல்வாறுர். அங்கே ஸாது சுந்தர் ஸிங்கின் நட்பை ஆண்ட்ரூஸ் பெற்றுர்.

ஸாது ஸுந்தர் ஸிங்கும், புரொபஸர் ருத்ராவும் உத்தமமான கிறிஸ்தவர்கள் என்று அவர் கண்டார். அந்திமகாலம் வரையிலும் அவர்களிடம் ஆண்ட்ரூஸுக்கு மாருத மதிப்பு இருந்தது.

1913-ஆம் ஸு வரையில் ஸ்டீபன்ஸ் காலேஜிலேயே ஆண்ட்ரூஸ் சேவை புரிந்துவந்தார். 1907-ஆம் ஸு அந்தக் காலேஜின் பிரின்ஸிபால் பதவி காலியாயிற்று. அதுவரையில் அந்தப் பதவியை ஆங்கிலேயருக்கே அளிப்பது வழக்கமா யிருந்துவந்ததால், அதை இப்போது ஆண்ட்ரூஸுக்குத் தர முன்வந்தார்கள்.

இது சற்றும் நீதியல்ல என்று ஆண்ட்ரூஸுக்குத் தோன்றிற்று. இந்த நிறபேதம் அவருக்குச் சம்மதமில்லை. நீண்டகாலமாய்க் காலேஜுக்குச் சேவை செய்து வந்திருக்கும் ருத்ரா இருக்கும்போது, அவர் இந்தியர், தாம் ஆங்கிலேயர் என்ற ஒரே காரணத்துக்காக, சமீபத்தில் வந்த தமக்கு அந்தப் பதவியை அளிப்பதாவது! புரொபஸர் ருத்ராவுக்கே பிரின்ஸிபால் பதவியைக் கொடுக்க வேண்டும் என்று ஆண்ட்ரூஸ் வற்புறுத்தினர். ஆண்ட்ரூஸும் மற்றும் சில ஆங்கில நண்பர்களும் செய்த இந்தக் கிளர்ச்சிக்கு, இங்கிலாந்திலிருந்த நிர்வாகிகள் இணங்கி, புரொபஸர் ருத்ராவையே காலேஜ் பிரின்ஸிபாலாக நியமித்தார்கள். ஆண்ட்ரூஸின் தியாகத்தால் அந்தக் காலேஜுக்கு முதன் முதலாக, ஒரு இந்தியர் பிரின்ஸிபால் ஆனர். இன்றும் அந்தப் பதவியை ஓர் இந்தியரான ஸ்ரீ எஸ். என். மூக்கர்ஜியே வகித்து வருவது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறே, ஆங்கிலிகன் சர்ச்சுக்கு ஓர் இந்தியரையே பிஷப்பாக நியமிக்க வேண்டுமென்ற கிளர்ச்சியிலும் ஆண்ட்ரூஸ் மிகுந்த

பங்கெடுத்துக் கொண்டார். அதன் பலனாக, பிஷப் பதவிபெற்ற முதல் இந்தியர் பிஷப் அஸேரியா ஆவார்.

அந்நாளில் சர்ச்சு, கல்லூரிகளின் உயர் பதவி நியமனங்களில்கூட இருந்துவந்த நிற வேற்றுமை அநீதியைத் தகர்த்தெறிய, ஆண்ட்ரூஸ் இந்தியாவுக்கு வந்த ஆரம்ப காலத்திலேயே இவ்வாறு சேவை புரிந்தார்.

1913-ஆம் ஆண்டு வரையில் டில்லியிலேயே இருந்துவந்த ஆண்ட்ரூஸ், அந்த வருஷத்தில் ரவீந்திரநாத தாகூரின் விசுவபாரதி ஆசிரமத்தில் சேர்ந்து, இந்தியாவின் மற்றோர் ஆங்கில நண்பரான டபிள்யூ. டபிள்யூ. பியர்ஸனுடன் அங்கே நெருங்கிய நட்புக்கொண்டார்.

தாகூரின் சாந்திநிகேதனத்தில் ஸ்ரீ ஆண்ட்ரூஸ் போய்ச் சேர்ந்த வரலாறும் ஒரு விநோதமாகும். 1912-ஆம் ஆண்டு ஆண்ட்ரூஸ் லண்டனுக்குச் சென்றிருந்தார். அப்போது, ரோதேன்ஸ்டீன் என்ற நண்பர், தீனபந்துவுக்கு ஓர் அழைப்பு அனுப்பினார். "ரவீந்திரநாத தாகூர் லண்டனுக்கு வந்திருக்கிறார். கீதாஞ்சலி என்ற புதிய கவிகள் அவர் எழுதியிருக்கிறார். அவற்றின் கையெழுத்துப் பிரதி

களை டபிள்யூ. பி. ஈட்ஸ் படிக்கப்போகிறார். நீங்களும் கேட்கலாம், வாருங்கள்" என்று அவர் அழைத்தார்.

ஆண்ட்ரூஸ் அவ்வாறே சென்றார். தாகூரின் புகழ் ஓங்காத நாள் அது. யாரோ ஊர் பேர் தெரியாத அந்நியராக அன்று அவர் லண்டனில் இருந்தார். அவநம்பிக்கையும் நோயின் தளர்வும் சோர்வும் அவர் முகத்திலே ததும்பின. அவரது கவிகளை ஈட்ஸ் படிக்கும் போது, தாகூர் கூச்சத்தால் நாணி, ஒதுங்கி, ஓர் ஓரமாய் ஒண்டிக்கொண்டார். அப்படியிருந்தும், அந்தக் கவிகளைக் கேட்ட ஆண்ட்ரூஸ், அவற்றிலே தம் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டார். அவை படித்து முடிந்ததும், தாகூரைப் பாராட்டுவதற்காக அவரிடம் சென்றார். ஆனால் ஆண்ட்ரூஸ் உணர்ச்சி மிகுதியால் ஊமைபோல் நின்றார்; வார்த்தைகள் நெஞ்சிலேயே அடைத்துக்கொண்டன. ஆண்ட்ரூஸின் உணர்ச்சிப் பெருக்கை, அவரது மௌனத் திகைப்பினின்றும் அறிந்து கொண்ட தாகூரும் மனமுருகிவிட்டார்.

அன்றிருந்தே, தாகூரின் சாந்திநிகேதனத்தில் சேர வேண்டுமென்று ஆண்ட்

ரூஸ¯க்கு ஆவல் விழுந்துவிட்டது. ஆனால், தாகூர் தம்மை அங்கீகரிப்பாரோ என்று அவருக்கு ஒரு கவலை உண்டாயிற்று. வில்லீ பியர்ஸனை அங்கீகரித்த தாகூர், தம்மை மட்டும் ஏன் ஏற்கமாட்டார் என்று தமக்குத்தாமே திடம் செய்துகொண்டார். இறுதியில் தாகூர் அவ்வாறே தீனபந்துவை ஏற்றுக்கொள்ளத் தான் செய்தார்.

## அத்தியாயம் 3

## காந்திஜீ சந்திப்பு

இச்சமயந்தான், தென்னுப்பிரிக்காவில், இந்தியரின் ஒப்பந்தக் கூலி அடிமைத்தனத்தை எதிர்த்து மகாத்மா காந்தி சத்யாக்ரகம் செய்து கொண்டிருந்தார். அதில் தீனபந்து ஆண்ட்ரூஸ் கலந்துகொண்ட ஸேவை அருமையானதாகும்.

'ஒப்பந்தக் கூலி' அடிமைத்தன முறை எப்படி நடந்துவந்தது என்பதை நண்பர்கள் இங்கே அறிந்துகொள்வது அவசியமாகும்.

தென்னுப்பிரிக்கா வெள்ளைக்காரர் தோட்டங்களிலே, பூர்வத்தில் நிஜ அடிமைகள் வேலை செய்து வந்தார்கள். அந்த அடிமை முறை ஒழிக்கப்பட்டவுடனே, எவரும் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய முன்வர வில்லை. தோட்டத்தில் வேலை செய்வதென்றாலே அடிமைத்தனத்தின் அடையாளமென்று அந்த மாஜி அடிமைகள் பயந்தார்கள்.

உடனே பிரிட்டிஷ் சர்க்கார், கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். அதன் மூலமாக, தென்னுப்பிரிக்கத் தோட்டங்களில் வேலை செய்யக் கூலிகளை அனுப்ப வேண்டினர்.

கிழக்கிந்தியக் கம்பெனியாரும் அவ்வாறே பல இந்தியத் தொழிலாளரைப் பிடித்து, தென்னுப்பிரிக்காவுக்கு அனுப்பினுர்கள். அவர்கள் சென்ற கப்பல்களுக்குப் பெயரே 'கூலிக் கப்பல்' என்று ஸ்தாபிதமாகி விட்டது. சென்னை மாகாணத்திலிருந்தும், வடஇந்தியாவிலிருந்தும் இந்தக் 'கூலி வேலை'க்கு ஆள்கள் சேர்க்கப்பட்டார்கள்.

கரும்புத் தோட்டங்களிலே ஏற்கனவே அடிமைகள் செய்து வந்த வேலையை, இந்த ஏழை 'இந்தியக் கூலிகள்' ஏற்றுக்கொண்டார்கள். பிஜி, நேட்டால், ட்ரினிடாட், பிரிட்டிஷ் கயானு முதலிய இன்னும் பல இடங்களிலும் 'இந்தியக்கூலிகள்' இப்படிக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

'இந்தியக் கூலிகள்' இவ்விதம் அந்த நாடுகளுக்குச் சென்றவுடனே, அவர்களைப் பல தோட்ட முதலாளிகளிடமும் ஏதோ ஆடுமாடு

களைப்போலப் பங்கு போட்டு விநியோகம் செய்தார்கள். இவர்கள் சற்றேறக்குறைய அடிமைகளைப் போன்ற நிலைமையில் அந்த முதலாளிகளிடம் தொழில் புரிந்தார்கள். இவ்வாறு ஐந்து வருஷம் ஒரு தோட்டத்தில் இந்தக் கூலிகள் தங்கள் ஒப்பந்தப்படி அடிமைபோலவே வேலை செய்தாக வேண்டும். முதலாளிகள் தங்களை நன்றாய் நடத்தினாலும் துன்புறுத்தினாலும் விமோசனமே கிடையாது. ஐந்து வருஷமுடிவில் இந்தக் கூலிகளை மீண்டும் ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி செய்ய, அந்த முதலாளிகள் சகல சூழ்ச்சிகளும் புரிவார்கள். கூலிகள் அதற்கு இணங்காமல், சுதந்திரமாய் வாழ விரும்பினால், அவர்களின் குடும்பத்தில் வயது வந்த அத்தனை பேரும் தலைக்கு 3-பவுன் விகிதம் சர்க்காருக்கு வருஷாந்திரம் ஒரு லைசன்ஸ் வரி செலுத்தவேண்டும். இந்தக் கொடுமைகளைக் கண்டுதான், ஸர் வில்லியம் ஹண்டர் என்ற பிரபல ஹிந்துதேசசரித்ர நிபுணர், தென்னாப்பிரிக்கா இந்தியக் கூலிகளின் நிலைமையை ‘அரை அடிமைத்தனம்’ என்று குறிப்பிட்டார்.

மேற்கண்ட மூன்று பவுன் தலைவரியை ரத்து செய்யவும், இந்தியர் தென்னாப்பிரிக்கா

வில் தங்கள் ஜாதிமதாசாரங்களின்படி செய்து கொள்ளும் கல்யாணங்களைச் சர்க்கார் அங்கீ கரிக்கவும் வேண்டும் என்பதே மகாத்மா காந்தி நடத்திய சத்தியாக்கிரகப் போரின் முக்கிய நோக்கமாகும். இவை யன்றி வேறு சில கொடுமைகளும் ஒழிய வேண்டுமென்று அவர் விரும்பினர்.

தென்னுப்பிரிக்காவில் நடந்த இந்தச் சத்தியாக்கிரகத்தை, இங்கே யிருந்தவாறு காலஞ்சென்ற கோகலே முதலிய அருந் தலை வர்கள் ஆதரித்து வந்தார்கள். தென்னுப் பிரிக்காவில் போராடும் நமது சகோதரர்களுக் குப் பணவுதவி புரியவேண்டு மென்று இங்கே பல கூட்டங்களும் நடந்தன.

தென்னுப்பிரிக்கப் போரை ஆதரிப்ப தற்காக லாகூரில் ஒரு கூட்டம் நடந்தது. அப்போது, அந்த ஏழைமக்களின் துயரத்தை அறியவந்த தீனபந்து ஆண்ட்ரூஸ் மனமுருகி விட்டார். தம்மிட மிருந்த பணம் முழுவதையும் அப்படியே தென்னுப்பிரிக்க இந்தியர் போராட்டத்துக்குச் சமர்ப்பித்துவிட்டார். ஆண்ட்ரூஸின் இந்தச் செயலைக் கண்டது முதல், இந்த 'விசித்திர' ஆங்கிலேயர்மீது, கோகலே கண்வைத்துக் கொண்டிருந்தார்.

பின்னல், தென்னப்பிரிக்க சத்தியாக் கிரகத்தில், மகாத்மாஜி கைதியானர். அவருக்கு வலதுகைபோல் உதவிவந்த ஸ்ரீ வெஸ்ட் என்ற ஆங்கிலேயரும் கூடவே கைதியாகி விட்டார். அந்தச் செய்தி கோகலேக்கு எட்டியது. உடனே அவர், இங்கிருந்து திறமைவாய்ந்த சிலரை அனுப்ப எண்ணினர்.

"நீங்கள் தென்னப்பிரிக்கா செல்லத் தயாரா?" என்று ஸ்ரீ ஆண்ட்ரூஸைத் தந்தி மூலம் ஸ்ரீ கோகலே கேட்டார்.

சிறிதும் தயக்கமின்றி, "தயார்" என்ற பதில் வந்தது.

ஸ்ரீ ஆண்ட்ரூஸ் மாத்திரமன்று; அவருடைய தோழரும் இந்தியாவின் மற்ருெர் நண்பருமான ஸ்ரீ பியர்ஸனும் அதே சமயத்தில் தென்னப்பிரிக்கா செல்லத் தயாரானர்.

ஸ்ரீ ஆண்ட்ரூஸுக்கு ஸ்ரீ கோகலேயின் தந்தி கிடைத்தபோது, ஆண்ட்ரூஸின் தாய் லண்டனில் நோய்வாய்ப்பட்டு, மிக்க அபாயமான நிலைமையில் இருந்தாள். ஆதலால், தாம் உடனே லண்டனுக்கு வருவதாக, ஏற்கனவே அவளுக்கு அவர் ஒரு கடிதமும் எழுதியிருந்

தார். ஸ்ரீ கோகலேயின் தந்தி ஒரு தர்ம சங்கடமான நிலைமையை உண்டாக்கிவிட்டது. மரணப் படுக்கையிலிருக்கும் அன்னையைப் பார்க்கச் செல்வதா? திக்கற்ற தென்னுப்பிரிக்க இந்திய மக்களுக்குச் சேவை புரியப் போவதா? தம் தாய்க்கே இதைத் தந்திமூலம் தெரிவித்து அவள் அபிப்பிராயத்தைக் கேட்டார். அந்தப் புனிதவதி, "எனது இந்திய சகோதரிகள் தவிக்கிருர்கள் என்ருல், அவர்களுக்கு உதவி செய்யத்தான் நீ போகவேண்டும்" என்று மகனுக்குக் கட்டளையிட்டாள். "அவள் செய்த இறுதித் தியாகம் இது; அவளை நான் பின்னுல் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை" என்று தீனபந்து ஓரிடத்தில் உருக்கமாய்க் குறிப்பிட்டிருக்கிருர்.

தென்னுப்பிரிக்கா செல்ல, வெகு அவசரத்தில் ஏற்பாடுகள் நடந்தன. ஸ்டீமரைப் பிடிப்பதற்காக, அன்றே பாதி ராத்திரியில் புறப்படும் ரயிலில் பயணமாக ஸ்ரீ ஆண்ட்ரூஸ் ஆயத்தமானுர். அச்சமயம் வில்லீ பியர்ஸன் ஓடி வந்தார். "உங்களுக்கு நான் ஒரு சிறிய பரிசு கொடுக்கப் போகிறேன்" என்று ஆண்ட்ரூஸிடம் கூறினுர். "அதென்ன பரிசு?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் ஆண்ட்ரூஸ்.

"அதுவா? அது நான்தான்" என்று சொல்லி, 'கொல்' என்று நகைத்தார் பியர்ஸன். அவரும் தம்முடன் வர ஏற்பாடு செய்து விட்டார் என்பதை அப்போதுதான் ஆண்ட்ரூஸ் அறிந்துகொண்டார்.

இருவரும் கப்பலில் சென்றுகொண் டிருக்கும்போது, தென்னுப்பிரிக்கா யூனியன் சர்க்கார் சற்று இணங்கி வந்துவிட்டார்கள். சமரஸ யோசனையுடன் காந்திஜியையும் வெஸ்டையும் மற்ருேர் நண்பரையும் விடுதலை செய்தார்கள்.

ஆகையால், ஸ்ரீ ஆண்ட்ரூஸும் ஸ்ரீ பியர்ஸனும் கப்பலில் போய் டர்பனில் இறங்கிய வுடனே அவர்களை வரவேற்க, காந்திஜி வந் திருந்தார். அவரைக் கண்டதும், இந்த நண்பர் கள் சந்தோஷமும் வியப்பும் அடைந்தார்கள். காந்திஜிக்கும் ஸ்ரீ ஆண்ட்ரூஸுக்கும் முதன் முதலாக ஏறபட்ட சந்திப்பு இதுதான்.

பிறகு, காந்திஜியுடனேயே பெரும்பாலும் ஸ்ரீ ஆண்ட்ரூஸ் சுற்றுப்பிரயாணம் செய்தார். காந்திஜிக்கும் யூனியன் சர்க்காரின் கலோனி யல் மந்திரியான ஜெனரல் ஸ்மட்ஸுக்கும் சமரசப் பேச்சுகள் நடந்தபோதெல்லாம் ஸ்ரீ ஆண்ட்ரூஸும் அநேகமாய்க் கூடவே

இருந்தார். ஜெனரல் ஸ்மட்ஸை, சமரஸத்துக்காக ஸ்ரீ ஆண்ட்ரூஸ் பெரிதும் வற்புறுத்திக் கொண்டேயிருந்தார். கடைசி ஒப்பந்தம் கையெழுத்தாகப் போகும் சமயத்தில், "கஸ்தூரி பாய்க்கு உடம்பு ரொம்ப அபாயமா யிருக்கிறது" என்று காந்திஜீக்குத் தந்தி வந்தது. ஒப்பந்தத்தில் ஜெனரல் ஸ்மட்ஸ் கையெழுத்திடும் வரையில், தாம் போகமுடியா தென்று காந்திஜீ சொல்லிவிட்டார். ஸ்மட்ஸிடம் சார்ளி ஓடினார். இந்தச் சேதியை அவரிடம் தெரிவித்து, துரிதப் படுத்துமாறு வேண்டிக்கொண்டார். ஸ்மட்ஸ் மிகவும் மனம் உருகி, ஒப்பந்தத்தில் உடனே கையெழுத்திட்டு, இருவரும் டர்பன் செல்ல விடைகொடுத்தார்.

ஒப்பந்தத்தின்படி மூன்று பவுன் வரி ஒழிந்தது. மற்றக் குறைகளையும் ஒழிப்பதாக ஸ்மட்ஸ் வாக்குறுதி யளித்தார். சத்தியாக்கிரகப் போரும் நிறுத்தப்பட்டது.

## அத்தியாயம் 4

## எங்கும் விடுதலை

1915-ஆம் வருஷ தாமாகவே, ஸ்ரீ பியர்ஸனின் துணையுடன் தீனபந்து ஆண்ட்ரூஸ் பிஜித் தீவுகளுக்குச் சென்றார். அங்கே இந்தியர் படும் அவதிகளை அறிந்து வர, அவர் ஆவல்கொண்டதுதான் காரணம்.

பிஜித் தீவுகளிலும் வெள்ளைக்காரர் தோட்டங்கள் நிறையவுண்டு. அவர்கள் அங்கே குடியேறிக் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பியது பற்றிய ஓர் உருக்கமான கதை இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

கிறிஸ்தவமதப் பிரசாரம் செய்யும் பாதிரியாக பிஷப் பாட்டிஸன் என்ற ஒருவர், பிஜித் தீவுகளுக்கு, சுமார் நூறு வருஷங்களுக்கு முன் சென்றார்.

அப்போது பிஜித்தீவின் பூர்வ குடிகள் மகா அநாகரிகமாகவும் மூர்க்கராகவு மிருந்தார்களாம்.

பிஜித் தீவுகளிலே ஓவாலா என்பது ஒன்றாகும். அந்தத் தீவில்தான் பிஷப் பாட்டிஸன் வசித்தார். அங்கிருந்து அவர் வெவ்வேறு தீவுகளுக்கும் தைரியமாய்ப் படகிலே செல்வார். அந்தச் சுதேசி மக்களிடம் கிறிஸ்துவ போதனை செய்து திரும்புவார்.

அந்த மக்களுக்கோ கப்பலில் வரும் அந்நியரைக் கண்டால் மிக்க பயம். ஏனெனில், வெள்ளைக்கார அந்நியர்கள், கப்பலில் சென்று, சுதேசிகளைச் சுட்டுக் கொன்று அவர்களது குழந்தைகள் சிலரையும் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள். அதனால், அந்த மக்களுக்கு வெள்ளைக்காரர் என்றாலே மகா ஆத்திரம். ஆதலால், பிஷப் பாட்டிஸன் இப்படிப் பல தீவுகளுக்குச் செல்வது மகா அபாயமாகும். அப்படியிருந்தும், மிகுந்த துணிச்சலுடன் அவர் செல்வார்.

படகிலிருந்து இறங்கியவுடனே, 'நான் சண்டைக்காக வரவில்லை; சமாதான தூதனாகவே வருகிறேன்' என்று காட்டுவதற்காக, இரு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு, அவர் ஜலத்திலே இறங்கி நடந்து கரையேறுவார்.

ஒரு சமயம் சில நண்பர்களுடன் சாந் தாக்ரூஸ் என்ற தீவுக்கு ஒரு படகிலே பிஷப் பாட்டிஸன் சென்றார். நண்பர்களை ஜலத் திலே படகிலேயே நிறுத்திவிட்டு, தாம் மாத் திரம் வழக்கம்போலவே கைகளைத் தூக்கிக் கொண்டு கரைக்குப் போனார்.

பிஷப் பாட்டிஸன் கரையை எட்டும்வரை யில் எல்லாம் அமைதியாகவே யிருந்தது; ஒரு விபரீதமும் நேரவில்லை. கரையில் கால் வைத் ததுதான் தாமதம். சங்கத் தொனி ஒன்று முழங்கியது. பல சுதேசிகள் ஈசல் கிளம்புவது போல் எங்கிருந்தோ ஓடிவந்து கூடிவிட்டார் கள். பிஷப்பை நாலாதிசையிலும் சூழ்ந்து அடித்து நொறுக்கிக் கொன்றுவிட்டார்கள்.

படகி லிருந்தவர்களுக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. அத்தனை மூர்க்கருக்கு நடுவே போய் அவரைக் காப்பாற்றுவது சாத் தியமில்லை. திக்கற்றவர்களாய் அந்தக் கொலை யைப் பார்த்துக் கண்ணீர் வடித்துக்கொண் டிருந்தார்கள்.

கடைசியில் ஒரே ஒருவர் மனந்துணிந்து, " அந்தப் பிரேதத்தையாவது கொடுங்கள் "

என்று கேட்பதற்காகக் கரைக்குச் செல்லத் தீர்மானித்தார்.

நண்பர் கரையில் ஏறியபொழுது, யாரும் அவரைக் கொல்ல அங்கே காத்திருக்கவில்லை. வியப்புற்றுக் கிராமத்துக்கே சென்றார்.

கிராமத் தலைவன் வந்து துக்கத்தோடு சொன்னான் :—"நாங்கள் ரொம்ப வருத்தப் படுகிறோம். பிசகு நடந்துவிட்டது. இந்த நல்ல மனிதரை, எங்கள் குழந்தையைத் திருடும் கள்ளனென எண்ணிக் கொன்றுவிட்டோம். சமீபத்தில் ஐந்து குழந்தைகள் பறிபோயின. அதனால் ஆத்திரமுற்று, அடுத்தாற்போல் வரும் ஐந்து ஆங்கிலேயரை முன்பின் யோசியாமல் கண்டவுடனே கொன்றுவிடுவதெனச் சபதம் செய்திருந்தோம். இந்த நல்ல மனிதரின் கொலை எங்கள் மனத்தை மாற்றிவிட்டது. என்னுடன் கூட வந்தால், அவர் பிரேதத்தைத் தருகிறேன்" என்றான்.

பிஷப்பின் நண்பரை அந்தக் காட்டுமிராண்டிகள் தலைவன் ஓர் ஏரிக்கு அழைத்துச் சென்றான். ஏரியிலே ஒரு படகு மிதந்து கொண்டிருந்தது. அந்தப் படகிலே துணியால் போர்த்தப்பட்டுக் கிடந்தது பிஷப்பின்

பிரேதம். அதைத் திறந்து பார்த்தார் நண்பர். பிஷப்பின் மார்பிலே ஐந்து ஒலிவ இலைகள் கிடந்தன.

"இது எதற்காக?"

"அதுதான் முன்னேயே சொன்னேனே ஐந்து குழந்தைகள் பறிபோயின வென்று; அதற்கடையாளமாகத்தான். இந்த நல்லோனைக் கொன்றதால், சமாதான அடையாளமாய் அஞ்சு ஒலிவ இலைகளை அணிவித்தோம்."

"இவர் நல்லவர் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார் நண்பர்.

"அவரை அடித்துக் கொல்லும்போது, அவர் எங்களைத் திருப்பியடிக்கவோ திட்டவோ முயலாமல், தலை வணங்கி, 'ஆண்டவனே! இவர்களின் பாவங்களை மன்னியுங்கள்' என்று வேண்டிக்கொண்டதைக் கண்டோம். ஆனால், அதை நாங்கள் கவனிக்குமுன் அடித்த அடியால் அவர் இறந்துவிட்டார்" என்று கண்ணீர் ததும்பக் கூறினான் அந்த வனவாசி.

பிஷப் பாட்டிஸனின் இந்தத் தியாகம் வீண்போகவில்லை. பிஜித்தீவுகள் பலவும் கிறிஸ்தவர் மயமாயின. ஐரோப்பியர் பலர் வந்து குடியேறி தோட்டங்களும் சம்பாதித்தார்கள்.

சுமார் எழுபது வருஷங்களுக்கு முன், இந்திய சர்க்காருக்கு, பிஜி ஐரோப்பியர்கள் ஒரு விண்ணப்பம் செய்து கொண்டார்கள். தென்னுப்பிரிக்காவுக்கும் பிரிட்டிஷ் கயானுவுக்கும் இந்தியக் 'கூலி'களை அனுப்பியது போலவே தங்களுக்கும் சில கப்பல்களில் ஒப்பந்தக் 'கூலி'கள் அனுப்புமாறு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இரண்டொரு வருஷங்களில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள், பல்லாயிரம் மைல்களுக் கப்பாலுள்ள இந்தக் கண்காணுத் தீவுகளுக்கு அனுப்பப்பட்டார்கள்.

பற்பல சூழ்ச்சிகள், ஆசை வார்த்தைகள், மோசடிகள் மூலமே அவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அவர்களைச் சேர்த்த கங்காணிகளுக்கு, ஒரு 'கூலி'க்கு இவ்வளவு ரூபாய் என்று கணக்கிட்டுச் சன்மானம் செய்தார்கள். ஆண் கூலியைவிடப் பெண் கூலிக்கே அதிகப் பணம். ஏனெனில், பெண்களைச் சேர்ப்பதே மிகச் சிரமமா யிருந்தது. எல்லாக் கூலிகளையும் கல்கத்தா மடியாபிரஸ் டெப்போவில் கொண்டு போய் வைத்துக்கொள்ளுவார்கள். ஆண்களில் மூன்றிலொரு விகிதம் பெண்கள்

சேர்ந்த பிறகு, 'கூலி'க் கப்பல் புறப்படும். இந்த முறையினால், பிஜி இந்தியத் தொழிலாளரிடையில் ஒழுக்கக் கேடுகள் மலியாமல் என்ன செய்யும்?

பிஜி போய்ச் சேர்ந்ததும், பல தோட்டக்காரரிடமும் இவர்கள் விநியோகம் செய்யப்படுவார்கள். தென்னாப்பிரிக்காவில் போலவே இங்கும் இவர்கள் அடிமைகள் மாதிரி ஐந்து வருஷம் வேலை செய்யவேண்டும். நடுவிலே ஓடிப்போக முயற்சித்தால் சிறையில் தள்ளப்படுவார்கள்.

கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகத் தம் உயிரையே பிஷப் பாட்டிஸன் அர்ப்பணம் செய்த அதே தீவுகளுக்கு, இந்நிலையிலேதான் மற்றோர் உத்தமக் கிறிஸ்தவரான ஆண்ட்ரூஸ் சென்றார். ஆனால் இவர் நோக்கம் வேறு.

தம்மைப் பிஜித் தீவுகளுக்குச் செல்லும்படித் தூண்டிய ஓர் ஆச்சரிய சம்பவத்தை, ஸ்ரீ ஆண்ட்ரூஸே ஓர் இடத்தில் வர்ணித்திருக்கிறார்.

1915-ஆம் ஹு சாந்திநிகேதன ஆசிரமத்தில் கோடை விடுமுறைக்காலம். சகல குழந்தைகளும் உபாத்தியாயர்களும் தத்தம் சொந்த ஊர்களுக்குச் சென்று விட்டார்கள். ஏதோ

சில தஸ்தாவேஜிகளை எடுத்துச் செல்வதற்காக, கல்கத்தாவிலிருந்து சாந்திநிகேதனுக்கு ஸ்ரீ ஆண்ட்ரூஸ் போயிருந்தார். திடீரென்று அன்று மாலை அவருக்குப் பேதி கண்டது. மகா கடுமையான காலராதான் தமக்கு வந்திருக்கிறது என்று ஆண்ட்ரூஸுக்கு வெகு சீக்கிரம் தெரிந்துவிட்டது. பக்கத்திலே ஒரு டாக்டரும் இல்லை. இராமுழுதும் மிக்க வேதனைப் பட்டார். பொழுது விடிந்துதான் டாக்டர் அகப் பட்டார். சூர்யோதயத்திலே ரவீந்திரநாதரின் முகத்தையும் கண்டார். கல்கத்தாவிலிருந்த ரவீந்திரர், தமது ஆருயிர் நண்பர் ஆண்ட்ரூஸுக்கு நோய் என்றதும் ஓடோடியும் வந்தார். தாகூரின் முகத்தைக் கண்டதுமே, தீனபந்துவுக்கு ஒரு புதிய தென்பும் தைரியமும் வந்தது. காலரா பெரிய தொற்று நோய். ஆயினும், ரவீந்திரரும் அவருடன் மற்றும் சில நண்பர்களும் அதை லட்சியம் செய்யவில்லை. ஆண்ட்ரூஸிடம் இருந்த அன்பின் மிகுதியால், தங்கள் உயிருக்கும் துணிந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளை அவர்கள் புரிந்தார்கள். அவர்களின் இந்த அன்பே தம்மைக் காப்பாற்றிற்று என்கிறார் ஸ்ரீ ஆண்ட்ரூஸ்.

நோய் குணப்பட்டு கல்கத்தாவிலுள்ள ஒரு நர்ஸிங் ஹோமுக்கு உடம்பைத் தேற்றிக் கொள்வதற்காக வந்துசேர்ந்தார். அப்போது பிரிட்டிஷ் சர்க்காரின் பிரசுரமான ஒரு நீலப் புஸ்தகம் அவர் கைக்கு எட்டியது. பிஜி இந்தியரின் துயரங்களைக் காட்டும் பயங்கரமான சில புள்ளி விவரங்களை அதில் அவர் கண்டார். இவை அவர் மனத்தைப் பலநாள் உறுத்திக் கொண்டே யிருந்தன.

ஒரு நாள் உச்சிநேரத்தில், அவர் கண்ணுக்கு ஓர் அற்புத தரிசனம் புலனாயிற்று. நேட்டாலிலுள்ள ஓர் ஏழை இந்தியனின் உரு வெளித்தோற்றம் அது. கெஞ்சுவதுபோல், அந்த உருவம் ஆண்ட்ரூஸைப் பார்த்துவிட்டு, தன் முதுகைத் திருப்பிக்காட்டியது. முதுகிலே புண்ணும் காயமும் இருந்தன. பிறகு அந்த உருவத்தின் முகம், ஏசுபகவானின் முகம் போல் உருமாறி ஒளி செய்தது. அதோடு சட்டென்று உருவெளி மறைந்துவிட்டது. பிஜிக்கு வருமாறு, ஆண்டவனே தமக்குக் கட்டளையிட்டதாக முடிவுசெய்தார் ஸ்ரீ ஆண்ட்ரூஸ்.

1915-ஆம் வருஷம், பிஜித் தீவுகளுக்குச் சென்று, அங்கே இந்திய மக்களுக்கு இழைக்

கப்படும் அநீதிகளைக் கண்டு மறுகினர். இந்தியாவுக்கு வந்துசேர்ந்ததும், பிஜி அக்கிரமங்களை விளக்கி ஓர் அறிக்கை வெளியிட்டார். அது காந்திஜி உள்பட, பல இந்தியத் தலைவர்களின் உள்ளத்தையும் கலக்கி விட்டது. இந்தியாவெங்கும் பிரமாதமான கிளர்ச்சியும் தோன்றியது.

1917-ஆம் ஹு இந்திய வைஸிராய் லார்டு செம்ஸ்போர்டு, யுத்த நெருக்கடியை உத்தேசித்து, 'கூலிகள்' சேர்ப்புதைத் தடைசெய்வதாக ஓர் உத்தரவு போட்டார். அது தற்காலிக சாந்தியேயாகும். யுத்தம் முடிந்ததும் இந்தக் கொடூர முறை மீண்டும் கிளக்கக்கூடுமல்லவா ? ஸ்ரீ ஆண்ட்ரூஸும் அவரது நண்பர்களும் அதைத் தடுக்க இப்போதே முயற்சி செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். பிஜியில் இந்தியர் நிலைமைகளைத் தக்க ருசுக்களுடன் ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பதற்காக 1917-ஆம் ஹு மீண்டும் அவர் பிஜிக்கு விஜயம் செய்தார். ஒரு வருஷம் அங்கேயே சுற்றி, தக்க சாட்சியங்கள் திரட்டிக் கொண்டு, 1918-ஆம் ஹு இந்தியாவுக்குத் திரும்பினர். அப்போது இந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு இந்தியாவி லிருந்தார். அவரிடம் சென்று பல

மாகவும் உருக்கமாகவும் வாதித்தார். அதன் பலனாக, பிஜியில் மாத்திரமன்று; 1920-ஆம் வருஷ ஜனவரிமீ 1-ந் தேதிக்குள், பிஜி, பிரிட்டிஷ் கயானா, டிரினிடாட், சுரினாம், ஜமெய்க்கா, மோரீஸ் முதலிய உலகின் பல மூலைகளிலுமுள்ள வெவ்வேறு காலனிகளிலும், பல்லாயிரக் கணக்கான இந்தியத் தொழிலாளர் தங்கள் அரை அடிமைத்தனத்தினின்றும் விடுதலையடைந்தார்கள். இதற்காக 1920-ஆம் வருஷ காங்கிரஸ் மஹாசபை தீனபந்து ஆண்ட்ரூஸுக்குத் தனது ஆழ்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொண்டது.

அத்தியாயம் 5

## ஜலியன்வாலா

1919-ஆம் ஆண்டு மார்ச்சுமீ மூன்றுவது வாரத்தில் 'ரௌலத் சட்டம்' என்ற கொடிய அடக்கு முறைச் சட்டம் இந்திய சர்க்காரால் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இதை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் புரிவது என்று மகாத்மா காந்தி தீர்மானித்தார். ஏப்ரல் 6-ந்தேதி தேசமெங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் மகாத்மாஜி வேண்டுகோள் விடுத்தார்.

ஏதோ தவறுதலால் டில்லியிலே மார்ச்சு மாதம் 30-ந்தேதியே ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது. அதனுல் சிறிது கலகமும் ஏற்பட்டது. போலீஸாரும் சொற்ப ராணுவமும் வந்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலகத்தை அடக்கினர்.

ஆனுல், ஏப்ரல் மாதம் 6-ந்தேதி நாடெங்கும் அற்புத அமைதியோடு ஹர்த்தால் நடை

பெற்றது. 8-ந்தேதி மகாத்மா காந்தி டில்லிக்குச் சென்று, துப்பாக்கிப் பிரயோகத்தால் மனங்கொதித்த துர்ப்பாக்கிய மக்களுக்கு ஆறுதல் கூற எண்ணினர். அதிகாரிகள் மகாத்மாஜியை டில்லிக்குள்ளே விடாமல், கைது செய்து, பம்பாய்க்குத் திருப்பியனுப்பி விட்டார்கள். காந்திஜி கைதியான செய்தியும், அமிர்தசரஸில் டாக்டர் சத்யபால், டாக்டர் கிச்லு இரு தலைவர்களும் கைதியான செய்தியும் மக்களுக்கு ஆத்திர மூட்டின. காலஞ்சென்ற ஓட்வியர் கவர்னராய் வீற்றிருந்த பஞ்சாப்பில் ராணுவச்சட்டம் அமுலுக்கு வந்தது. காலஞ்சென்ற ஜெனரல் டயர் ஏப்ரல் 11-ந்தேதி அமிருதசரஸ் நகர் மீது ராணுவ ஆட்சியை ஆரம்பித்து விட்டார். 'கூட்டம் கூடலாகாது, கூடினல் சுட்டு வீழ்த்துவோம்' என்று அவர் போட்ட தடையுத்தரவை மீறி ஜலியன்வாலா பாக்கில் ஒரு கூட்டம் நடக்கப் போவதாகக் கேள்விப்பட்டு, தமது துருப்புகளுடனும் மெஷின் துப்பாக்கிகள் சகிதமும் டயர் அவ்விடம் ஆஜரானர். ஏதோ ஹிந்து உற்சவமானதால், ஏராளமான ஸ்திரீ புருஷர்கள், குழந்தை குட்டிகளுடன் கூடியிருந்தனர்.

வீரன் டயர், அங்கே தோன்றிய முப்பதே விநாடியில், கூட்டம் எங்கே மிக நெருக்கமா யிருந்ததோ அங்கு நோக்கி, 'மளமள' வென்று சுடத் தொடங்கி, பத்து நிமிஷ நேரம் சரமாரி யாய்ச் சுட்டார்; கையிலிருந்த தோட்டாக்கள் தீரும் வரையில் சுட்டார். சுமார் ஐந்நூறு அறுநூறு ஜனங்கள் வரை மாண்டார்கள்; அதைப்போல் மூன்று மடங்கு ஜனங்கள் காய மடைந்தார்கள். சுடுமுன் எச்சரிக்கை யொன் றும் கிடையாது; சுட்டபின் காயமுற்ற ஜனங் களுக்கு வைத்தியமோ, வேறு உதவியோ கிடை யாது. மேலும் நகரிலே பயங்கர ராணுவ ஆட்சி தொடர்ந்தது. ஆனல், பல நாள்வரை இச் செய்திகளெல்லாம் மாகாணத்துக்கு வெளியே போகாமல் சர்க்கார் தடுத்துவிட்டார்கள்.

உண்மை யென்ன என்று அறிவதற்காக, தீனபந்து ஆண்ட்ரூஸ் பஞ்சாபுக்கு விரைந் தோடினர். ஆனல், சர்க்கார் அவருக்குத் தடையுத்தரவு விதித்தது. தடையுத்தரவை மீறி பஞ்சாபுக்குள் அவர் பிரவேசித்தார். கைதி யாகி, அவர் பின்னல் விடுதலையடைந்தார்.

பஞ்சாப் கொடுமைகளை விசாரிக்க, லார்டு ஹண்டர் தலைமையில் ஒரு கமிட்டி வந்தது.

அதன்முன் சாட்சியம் கூறுவதாகக் காங்கிரஸ் முதலிலே தீர்மானித்தாலும், சில தலைவர்கள் விடுதலை யாகாததால் பின்னால் அதிருப்தியுற்று, தனி விசாரணை நடத்த உத்தேசித்தது. அந்தத் தனிவிசாரணை முயற்சியைத் தீனபந்து ஆண்ட்ரூஸ் கைக்கொள்ளவேண்டுமென்று, இந்தியப் பத்திரிகைகளும், காந்திஜி, பெஸண்ட் போன்ற தலைவர்களும் வற்புறுத்தினார்கள்.

தாமும் காந்திஜியும் காலஞ்சென்ற சுவாமி சிரத்தானந்தரும் மற்றும் சில தலைவர்களும் அடங்கிய ஒரு விசாரணைக் கமிட்டியை, தீன பந்து அமைத்தார். ஆனால், வெளிநாட்டு இந்தியர் துயரமே அவருடைய முதல் கவலையாதலால், நவம்பர் மாதத்தில் அவர் தென்னாப்பிரிக்கா செல்ல நேர்ந்தது. அதாவது, தமது கமிட்டி பஞ்சாப் விசாரணை தொடங்கிய சில வாரத்துக்குள் அதை விட்டு அகன்றார். எனினும், வெளி நாட்டிலுள்ள இந்தியருக்கு மட்டுமின்றி, பஞ்சாப் விஷயமாகவும் ஆண்ட்ரூஸ் செய்த சேவையைப் பாராட்டி, அந்த வருஷக் காங்கிரஸ் மகாசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

தமக்குப் பேருதவியும் ஒத்துழைப்பும், தீன பந்து சார்ளி ஆண்ட்ரூஸ் எண்ணற்ற சமயங்களில் அளித்துள்ளதாக, மகாத்மா காந்தி சொல்லியுள்ளார். என்றாலும், தமக்கு மகாத்மாஜியிடம் உள்ள பக்திக்காக, ஆண்ட்ரூஸ் தமது மனச்சாட்சியைப் பறிகொடுக்கமாட்டார். "அஹமதாபாத் காங்கிரஸுக்கு நீங்கள் வரவேண்டும்; வந்து, மதபக்தி நிறைந்ததோர் செய்தி யளிக்கவேண்டும்" என்று ஆண்ட்ரூஸைக் காந்திஜி கேட்டுக்கொண்டார். தீனபந்துவும் இசைந்தார். ஆனால், அந்நியத் துணிக்குத் தீவைக்க வேண்டுமென்று காந்திஜி சொன்னதை மட்டில் பகிரங்கமாகத் தீனபந்து எதிர்த்தார். தவிர, காந்திஜியின் அந்தத் திட்டத்தைக் கண்டிக்கும் அடையாளமாக, அந்நியத் துணியால் செய்யப்பட்ட உடுப்புடனேயே காங்கிரஸுக்கு விஜயமும் செய்தார்.

ஆனால், சற்றேறக்குறைய இதே காலத்தில்தான் 'இந்திய சுதந்திரம் — அதன் அவசரம்' என்றோர் நூல்* எழுதி, அதில் மகாத்மா காந்தியின் இயக்கத்தை முழுமனத்துடன் தீனபந்து ஆதரித்திருக்கிறார்.

---

* இந்நூல் விரைவில் வெளிவரும்.

"இது ஓர் அற்புதமான வியாசம்; பதிலே சொல்ல முடியாதபடி, இந்திய சுதந்திரத்தின் கட்சியை வாதிக்கும் நூல்" என்று பண்டித ஜவாஹர்லால், இந்நூலைக் குறித்து, தமது சுய சரிதத்தில் கூறுகிறார். ஆண்ட்ரூஸின் அந்த நூலிலிருந்து பண்டித ஜவாஹர் மேற்கோளாக எடுத்தாண்டுள்ள பின்வரும் வாசகம் குறிப்பிடத் தக்கது:— "இந்தியா தன்னைத் தானே மீட்டுக்கொள்ள வேண்டுமானல், அதற்குத் தனக்குள்ளிருந்தே ஜீவ சக்தி வாய்ந்ததோர் எழுச்சி தோன்றுதல் வேண்டும். அத்தகைய எழுச்சிக்குத் தேவையான வெடி மருந்து இந்தியாவின் ஆத்மாவி லிருந்தே ஜனிக்கவேண்டும். அந்நியர் கொடுக்கும் கடன்கள், தானங்கள், அனுகூலங்கள், விளம்பரங்கள் ஆகியவற்றின் மூலமாக அது வருவது சாத்தியமில்லை; உள்ளே யிருந்தே அது வரவேண்டும்........ஆதலால்தான், இந்தியாவின் உள்ளத்திலே பதியும் வண்ணமாக மகாத்மா காந்தி, 'விடுதலை பெறுங்கள்; இனி அடிமைகளாக இராதீர்கள்' என்ற மகா மந்திரத்தை உபதேசித்தார்; அதற்கு இந்தியாவின் ஹ்ருதயம் சுருதி போடலாயிற்று. இதிலே, மேற்கூறிய வெடி மருந்துச் சக்தி, இந்தியாவின் அகத்திலே

யிருந்து உடைத்துக்கொண்டு வெளியேறியதை நான் கண்டேன். அப்போது, என் மனத்தினின்றும் ஹ்ருதயத்தினின்றும், தாங்காப் பாரமொன்று இறங்கியது. அதனாலுண்டான பரமானந்தமொன்றை நான் அனுபவித்தேன். திடீரென்று, ஒரே கணத்திலே, இந்தியாவின் தளைகள் நெகிழ்ந்தன. விடுதலை மார்க்கம் திறந்தது." இவ்வளவு உருக்கமாகவும், பரிபூர்ணமாகவும், அழகாகவும், மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கத்தை அப்போதே தீனபந்து ஆண்ட்ரூஸ் ஆதரிக்கத் தொடங்கி விட்டார்.

அத்தியாயம் 6

## எண்ணற்ற சேவைகள்

ஆண்ட்ரூஸ் கவனித்த அடுத்த பெரிய பிரச்னை கெனியா இந்தியர்களின் குறைகளாகும்.

கெனியாவில் இந்தியர்களை அங்குள்ள ஐரோப்பியர் மிகவும் அகௌரவமாக நடத்தத் தொடங்கினார்கள். இந்தியர்களை நிர்ப்பந்தமாக, ஓரிடத்தில் சேரிபோல் ஒதுக்கத் துணிந்தார்கள். இந்தியருக்கு ஓட்டுரிமை இல்லை என்றார்கள். இந்தியர் இனி வந்து இங்கு குடியேறலாகாது என்று தடுத்தார்கள். இந்த நிர்ப்பந்தங்களை மட்டிலுமல்ல, இன்னும் மோசமான சங்கடங்களையும் கூட இந்தியர்மீது அவர்கள் சுமத்தி விடுவார்களோ என்று பயப்படவேண்டிய நிலைமை 1928-ஆம் ஆண்டு நேரிட்டது.

இதன்மேல் கெனியா இந்தியரின் தூதுக் கோஷ்டி யொன்று, லண்டனில் காலனி மந்திரியைக் கண்டு பேசப் புறப்பட்டது. தீனபந்துவும் அந்தக் கோஷ்டியோடு சென்று, உதவி புரிய வேண்டுமென்று, கெனியா இந்தியர்கள்

வேண்டிக்கொண்டதற்கு, தீனபந்து இசைந்தார். இவ்விஷயமாய் அவர் ஆற்றிய அரிய சேவைக்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி வந்தனம் செலுத்தியது.

இரண்டு வருஷங் கழித்து, இந்திய-தென்னுப்பிரிக்க ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள் நடத்த ஒரு இந்தியப் பிரதிநிதியாக, தென்னுப்பிரிக்காவுக்குத் தீனபந்து சென்ருர். 1927-ஆம் ஹு அந்த ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

1929-ஆம் ஹு கானடாவைச் சேர்ந்த வாங்குவார் என்னுமிடத்தில் நடந்த கல்வி மகாநாட்டுக்கு அவர் சென்ருர். அதே வருஷத்தில் பிரிட்டிஷ் கயானுவில் குடியேறிய கிழக்கிந்தியரின் சில குறைகளைக் கவனிப்பதற்காக, அந்தக் காலனிக்கு மீண்டும் ஒருமுறை செல்ல நேர்ந்தது.

மற்றும் தீனபந்து, இந்தியாவுக்காக எத்தனையோ விதமாக எண்ணற்ற சேவைகள் புரிந்திருக்கிருர்.

எந்த வேலையையும் கேவலமென்றே தாழ்ந்ததென்றே தீனபந்து நினைப்ப தில்லை. அவர் தூதுகள் செல்வார். வைசிராய்க்கோ,

வணங்காமுடியான ஆத்திரங்கொண்ட தோர் அதிகாரிக்கோ கடிதங்கள் கொண்டு செல்வார். பெரும்பாலான சமயங்களிலும் அவர் அதிகாரி களின் உணர்ச்சியை இளக்கி, அற்புதங்கள் புரிந்து, வெற்றி யடைந்திருக்கிறார்.

1933-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் காந்தி ஜியின் கடைசி எர்ரவாடா உபவாசம் நிகழ்ந்த போது, இரவும் பகலும் சகல நேரத்திலும் ஸர் ரெஜினல்டு மாக்ஸ்வெல்லே, தீனபந்து உபத் திரவம் செய்துகொண்டே யிருந்தார். கடைசி யில் காந்திஜி விடுதலையடைந்தார்.

1932-ஆம் வருஷம் பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பின்மீது காந்திஜி உபவாசம் கிடந்தபோது, ஹாலிபாக்ஸ் பிரபு, மிஸ்டர் மாக்டொனல்டு, ஸர் ஸாமுவேல் ஹோர் மூவரிடமும் தீனபந்து மாறி மாறி ஓடினர். திருத்திய முடிவை பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு நிமிஷமும் தாமதியாமல் வெளியிடும்படிச் செய் தார்.

மற்றும் கணக்கிலடங்காத எத்தனையோ சந்தர்ப்பங்களில் சமாதான வேலையைத் தாம் மேற்போட்டுக்கொண்டு, பலன் எப்படி

யாகுமோ என்று கவலைப்படாமல் அவர் உழைத்திருக்கிறார்.

தூது வேலைகளை மாத்திர மன்று; நகல் எடுத்தல், டைப் அடித்த கடிதங்களில் பிழையில்லாது திருத்துதல் முதலிய நச்சுப் பிடித்த குமாஸ்தா வேலைகளையும் தயக்கமின்றி அவர் செய்வார். 'வானத்து நட்சத்திரம் போன்றது அவர் ஆத்மா; மிகத் தாழ்ந்த பணிகளெல்லாம் அவர்மீது சுமந்தன' என்று ஸ்ரீ மகாதேவ தேசாய் மிக்க உருக்கமாக எழுதியுள்ளது மிக மிக உண்மையாகும்.

1921-ஆம் வருஷம் ஹிந்து - முஸ்லீம் ஒற்றுமைக்காக மகாத்மா காந்தி 21 நாள் உபவாசம் கிடந்தபோது, தமது 'யங் இந்தியா' வின் ஆசிரியர் பொறுப்பைத் தீனபந்து ஆண்ட்ரூஸிடமே ஒப்படைத்தார். அப்படி ஒப்படைக்கையில், தீனபந்துவைப் பற்றிக் காந்திஜி எழுதிய புகழுரை, இங்கு குறிப்பிடத் தக்கது: "நாங்கள் கூடப்பிறந்த சகோதரர் கள் போல. நான் அளிக்கக்கூடிய அதே செய்தியை, இன்னும் அதிகத் தூய்மையும் அழ கும் வாய்ந்த நடையிலே அவர் அளிப்பார். அது வாசகருக்குச் சந்தோஷமே யல்லவா? என்ன

தான் இருந்தாலும், இங்கிலீஷ் எனக்கு அந்நிய பாஷைதானே. சார்லீ ஆண்ட்ரூஸோ அந்த பாஷையில் "நிபுணர்" என்று வர்ணித்தார் காந்திஜி. இப்படியாக, 'யங் இந்தியா' ஆசிரியர் பொறுப்போ, தூது வேலைகளோ, பணிவிடைகளோ, ராஜீய வேலையோ, எதுவாயினும் சிறிதும் வெறுப்பின்றி உற்சாகமாகவும் உள்ளன்போடும் தீனபந்து ஊழியம் புரிவார்.

## அத்தியாயம் 7

## குணக்குன்று

சார்லி ஆண்ட்ரூஸ் ஒரு குணக்குன்று; மிக்க சாந்த சுபாவம். அன்பையே ஹ்ருதயமாய்ச் சமைத்ததுபோன்ற உள்ளம் படைத்தவர். பரமத் தியாகி. தனக்கென்று ஒன்றுமே வைத்துக்கொள்ள அவருக்குத் தெரியாது. சதா சர்வதா ஏழைகளின் சேவையே ஞாபகமாய் வாழ்ந்த தீனதயாளு. 'தீனபந்து' என்ற பட்டம் அவருக்கு முக்காலும் பொருத்தமானது. இந்த அன்பு நிரம்பிய பட்டத்தை யாரோ தீனபந்துவுக்குக் கொடுத்தார்களாம். அதை மகாத்மாஜி, பகிரங்கம் செய்து ஸ்திரப்படுத்திவிட்டார்.

தென்னாப்பிரிக்காவுக்கு அற்புத சேவை புரிந்துவிட்டு, 1927-ஆம் ௵ அவர் திரும்பி வரும்போது, அவருக்கு வரவேற்பு உபசாரம் நடத்தவேண்டுமென்று பம்பாய்க் கார்ப்பொரேஷன் தீர்மானித்தது. அச்சமயம் 'யங் இந்தியா'வில் காந்திஜி எழுதிய கட்டுரையை

விட அழகாகவும் சுருக்கமாகவும் உண்மையாகவும், சார்லி ஆண்ட்ரூஸின் குணதிசய சித்திரத்தை வேறொருவரும் வர்ணிக்க முடியாது. மகாத்மாஜி எழுதினார் :

'தீனபந்து' என்ற வாற்சல்யப் பட்டத்தை யாரோ அவருக்குச் சூட்டினார்கள். அது அவருக்கு முற்றிலும் பொருத்தமானது. அவருக்கு வாழ்க்கையிலே ஒரே ஒரு காரியத்தில்தான் பரம ஆசை. தீனர்களுக்கு நண்பனாயிருப்பதே அது. தம்மைத்தாமே அடியோடு தியாகம் செய்துகொண்டு அவர் உபகாரம் புரிவார்.

"தீனபந்து ஒரு பணக்காரரல்ல. தலை சாய்க்க அவருக்கு ஓர் இடங்கூடக் கிடையாது. பாத்திரம் பண்டங்களோ, பணப்பெட்டியோ, சொந்த வீடோ எதுவும் அவருக்குக் கிடையாது. அவரிடமுள்ள மிகச் சொற்பப் பொருள்களைக் கூட யாராவதுதான் காப்பாற்றவேண்டும். தமக்கென்று அவர் ஒன்றுமே வைத்துக் கொள்வதில்லை. அவர் பெட்டியை, அதிலுள்ள சாமான்களோடு எவர் வேண்டுமாயினும் எடுத்துக்கொண்டு போய்விடலாம். தம்மைப் பற்றியோ தம்முடையவை என்று சொல்லக்கூடிய சொத்துக்களைப்பற்றியோ ஆண்ட்ரூஸ் கவலை

கொள்ளவேமாட்டே னென்கிறாரே என்று, தென்னாப்பிரிக்காவிலே நானும் பியர்ஸனும் எப்பொழுதும் மனம் சோர்ந்துகொண்டேயிருந்தோம். ஆதலால் விலையுயர்ந்த பேழைகளைச் சன்மானிப்பது அவருக்குக் கொடுமை புரிவதாகும். எந்த விதமான பேழைகளைக் கொடுப்பதுமே பயனில்லை.

"ஆனால், பம்பாய்க் கார்ப்பொரேஷன் ஏதேனும் பணம் செலவழிக்கத் தயாரா யிருந்தால், ஸ்ரீ ஆண்ட்ரூஸ் தமது வாழ்வு லட்சியமாய்க்கொண்ட சேவையைப் புரிய உதவியாக, ஒரு பணமுடிப்புக் கொடுப்பதே மிகப் பொருத்தமாகும். தம்மிடம் காட்டப்படும் அன்பை அவர் பாராட்டுவார். ஆனால், தமக்கு வந்தனங்களோ, மரியாதைகளோ செலுத்தப் பட்டால் ரொம்பச் சங்கடப்படுவார்; எதற்காகத் தமக்கு வந்தனங்களும் மரியாதைகளும் செலுத்தப்பட வேண்டும் என்று அவர் ஆச்சரியப்படுவார். அவர் என்னதான் சங்கடப்பட்டாலும் சரி; அவருக்குச் செலுத்தப்படும் மரியாதை வெறும் ரகஸ்ய வேலையாயிருக்கவேண்டாம். ஏனெனில், தென்னாப்பிரிக்காவில் அவர் செய்திருக்கும் அற்புத கைங்கரியத்துக்கு,

இந்த மரியாதையெல்லாம் சந்தேகமின்றி அவருக்கு உரியதாகும்.”

தீனபந்துவைப்பற்றி மகாத்மா காந்தியின் உள்ளங் கனிந்த மதிப்புரை இது.

“கிழவர் - குமரர், எளியர் - செல்வர், உயர்ந்தோர் - தாழ்ந்தோர் சகலருக்கும் அவர் நண்பர். என் குழந்தைக்கு, குப்லாகான் என்ற கவியைப் படிக்க உட்கார்ந்தாரானல், குழந்தையின் குதூகலத்திலே தாமும் கலந்துகொள்வார். குடியேற்ற நாட்டந்தஸ்தா பூர்ண சுயேச்சையா என்பதைப்பற்றிக் காந்திஜியுடனே, கிறிஸ்தவ சமயத்திடம் காந்திஜியின் மனப்பான்மையைப் பற்றி டாக்டர் ஜான் மாட் என்ற பாதிரியாரிடமோ விவாதிக்க உட்கார்ந்தாரானல், குழந்தையின் நிஷ்களங்கமும் உண்மையில் பற்றுதலும் அவரிடம் தளும்பும்” என்கிறார் ஸ்ரீ மகாதேவ தேசாய்.

தீனபந்து, எவரையும் நம்பும் சுபாவமுடையவர். அதனல் சில சமயம் சங்கடங்களில் சிக்கிக்கொண்டு, தப்ப வழி தெரியாது அவர் திணறுவதுண்டு. மோசக்காரர்களிடம் அவர் அகப்பட்டுக்கொள்வார். வெகு சுலபமாக இவரை அவர்கள் ஏமாற்றிவிடுவார்கள். வெள்ளிக்

குத்துவிளக்குகளை இழந்ததால் சந்தோஷித்த விக்டர் ஹ்யூகோவின் பிஷப்பைப் போலவே இவரும் மகிழ்வார். 'ஏமாற்றுவதைவிட ஏமாறுவது மேல். ஏமாறுவது சந்தோஷம் தருகிறது; ஏமாற்றுவதோ துயரமே அளிக்கிறது' என்று கபீர் பாடியிருக்கவில்லையா?

"நீ பிரயாணம் செய்யும்போது, தங்கம், வெள்ளி, செப்பு எந்தக் காசுகளும் உன் பையிலே வைத்திருக்கவேண்டாம். ஜோல்னுப் பையும் வேண்டாம். இரண்டு அங்கிகளோ, ஒரு ஊன்றுகோலோகூடக் கொண்டுபோக வேண்டாம்" என்றார் ஏசுநாதர். இந்த உபதேசத்தைப் பரிபூர்ணமாக அனுஷ்டித்தவர் தீனபந்து சார்லி ஆண்ட்ரூஸ். அதனால் சில சமயம் சிறு தமாஷ்களும் நடந்துவிடுவது உண்டு. காந்திஜியின் கஜான்ஜியாக இருந்துவந்த ஸ்ரீ பியாரிலால் ஒரு சமயம் பத்து ரூபாய் நோட்டொன்றை ஸ்ரீ ஆண்ட்ரூஸிடம் அளித்து, "காந்திஜி வந்த வண்டிக்காரனுக்குக் கூலி கொடுத்துவிட்டு வாருங்கள்" என்று அனுப்பினர். அப்போது காந்திஜிக்குக் குடல் அனுபந்த ஆப்பரேஷன் ஆகி, பூனா ஸாஸூனின் ஆஸ்பத்திரியில் இருந்து கொண்டிருந்தார்.

நோட்டை வாங்கிக் கொண்டுபோன ஆண்ட்ரூஸ் மாலையிலே திரும்பி வந்து, நிஷ்களங்கமான குரலில், "பியாரிலால்! அந்த நோட்டு என் ஜேபியை விட்டு நழுவிவிட்டது. வண்டிக்காரன் கூலியை நீரே போய்க் கொடுத்துவிட்டு வாரும்" என்று சொன்னார்.

பின்னால், காந்திஜியிடம் இதை அவர் தெரிவித்தபோது, அவரிடம் தாம் பட்ட இடியை ஒரு நாளும் மறக்கமுடியாது என்கிறார் ஸ்ரீ பியாரிலால். "இதை முன்னாலேயே நீர் தெரிந்துகொண்டிருக்க வேண்டாமா? அந்த நோட்டை அவர் கெட்டுப்போக்கி யிராவிட்டால் கூட என்ன செய்திருப்பார்? முதன் முதலிலே எதிர்ப்படும் பிச்சைக்காரனுக்குத் தானம் பண்ணியிருப்பார். ஆண்ட்ரூஸிடம் பணத்தைக் கொடுத்ததைவிட, நீர் அதை ஒரு குழந்தையிடம் கொடுத்திருக்கலாமே" என்று காந்திஜி கோபித்துக்கொண்டாராம்.

மிஸ் அகதா ஹாரிஸன் என்ற ஆங்கிலப் பெண்மணி, இந்தியாவுக்கும் காந்திஜிக்கும் ஆண்ட்ரூஸ் அளித்த நன்கொடை போன்ற உத்தமியாவாள். சில சமயம் அவள் ஸ்ரீ ஆண்ட்ரூஸின் காரியதரிசியாய் வேலை செய்தாள்.

அவள் ஆண்ட்ரூஸைப்பற்றிப் பின்வருமாறு காந்திஜியின் ஆசிரம நண்பர்களிடம் சொல்வது வழக்கமாம்:—"ஆண்ட்ரூஸ் இந்தியாவிலிருந்து லண்டனுக்கு வரும்போதெல்லாம், வந்தவுடனே நான் என்ன செய்வேன் தெரியுமா? அவர் சட்டை ஜேபிகளையெல்லாம் சோதனை போட்டு, அவற்றைக் காலி செய்வேன். அப்படிச் செய்யாவிட்டால், அவர் ஜேபியில் நண்பர்களுக்கு வந்திருக்கக்கூடிய முக்கியச் செய்திகளெல்லாம் அந்தந்த நண்பர்களிடம் போய்ச் சேராமல், வண்ணானிடம் போய்ச் சேர்ந்துவிடும். சார்லி ஒரு குழந்தை. அவரைக் கவனித்துக்கொள்ள ஒரு தாயார் வேண்டும்."

ஆழ்ந்த சிந்தனையும் இணையற்ற கல்வியும் பரந்த அனுபவமும் அவருக்கு இருந்தாலும், ஆண்ட்ரூஸின் இருதயம் ஓர் ஏழு வயதுக் குழந்தையின் உள்ளம் போன்றது; நிஷ்களங்கமானது.

## அத்தியாயம் 8

## இந்தியாவிடம் அன்பு

தீனபந்து உத்தமமான கிறிஸ்தவர். வாய்ச் சொல் கிறிஸ்தவரல்ல. வாழ்க்கையிலே கிறிஸ்து பிரானின் உபதேசங்களை அனுஷ்டித்தவர். அவர் உண்மைக் கிறிஸ்தவராதலால், மனித குலத்தின்மீதே அன்பு சொரிந்தார். அதுதான் அவர் இந்தியாவை நேசித்த காரணம். இந்தியாவுக்கு வந்து சிலகாலம் வாழ்ந்தபின், இந்தப் புண்ணிய பூமியையே தமது தாய்நாடாக அவர் சுவீகரித்துக்கொண்டார். எங்கே திக்கற்றவர்கள் வாழ்கிறார்களோ அங்கேதானே, தீன தயாளுவான அவருடைய தாய்நாடு இருக்க முடியும்?

இந்தியாவின் தீனக்குரல் அவர் காதிலே எப்படியோ விழுந்தது; வந்து அந்த இந்தியாவிலே ஐக்கியமாகிவிட்டார். இந்தியாவின் தவப் புதல்வர்களான டாக்டர் ரவீந்திரநாத தாகூர், மகாத்மா காந்தி முதலியவருடன் சேர்ந்து இந்தியாவுக்குப் பல சேவைகள் புரிந்தார்.

இந்திய தேசீயக் காங்கிரஸ் இன்றல்லவா பூரண சுயேச்சையே இந்தியாவின் லட்சியம் என்கிறது. 1921-ஆம் வருஷத்திலேயே அதில் ஆண்ட்ரூஸ் ஆர்வங் கொண்டுவிட்டார். 1921-ஆம் வரு ஜூலை மீ 13வ 'யங் இந்தியா' வில் மகாத்மா காந்தி இதைக் குறிப்பிட் டிருக்கிறார்:—"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக் குள்ளே, சுயமதிப்பும் சுய ஆட்சியும் கொண்ட இந்தியாவுக்கு இடங் கிடையாது என்பது ஸ்ரீ ஆண்ட்ரூஸின் அபிப்பிராயம். நானும் ஒருநாள் இந்த அபிப்பிராயத்துக்கு வந்து விடுவேன் என்று அவர் நம்புகிறார்."

இரண்டு வருஷங்களுக்கு முன் அவரது உடல் நிலை குன்றிவருவதையும் வயது முதிர்ந்து வருவதையும் கண்ட நண்பர்கள், "இங்கிலாந் திலே ஓர் அமைதியான இடத்தில் வந்து தங்கி, உங்கள் தெளிவான எழுத்தின் கனிகளான இன்னும் பல நூல்களை உலகுக்கு அளியுங் களேன்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

"மாட்டேன். இந்தியாவை விட்டு வேறெங் கும் போய் என்னால் தங்க முடியாது" என்று அவர் சொல்லிவிட்டார்.

கடைசிக் காலத்தில், கல்கத்தா ஆஸ்பத்திரியில் அவருக்கு இரண்டு ஆப்பரேஷன்கள் செய்த ஸர்ஜன், "இங்கிலாந்துக்கோ ஐரோப்பாவுக்கோ சென்று, உங்கள் இரண்டாவது ஆப்பரேஷனை அங்கே செய்துகொள்ளுங்கள்" என்று யோசனை சொன்னார்.

"மாட்டேன்" என்று திடமாய்ப் பதில் அளித்துவிட்டார் தீனபந்து.

அவருடைய நீடித்த வியாதியின் சகல செலவுகளையும் பொறுத்துக்கொண்ட ஸ்ரீ ஜி. டி. பிர்லா, அவர் ஒரு விமானத்திலே தாய்நாடு சென்று ஆப்பரேஷன் செய்துகொள்ளுவதானால், அந்தச் செலவையும் சந்தோஷமாகவே ஏற்றுக்கொண்டிருப்பார். ஆனால், தமது உண்மையான தாய்நாட்டை (இந்தியாவை) விட்டு அவர் எப்படிப் பிரிவார்?

"எனக்கு என்ன நேர்ந்தாலும் சரி, அது இங்கேயேதான் நேரவேண்டும்" என்று சொல்லிவிட்டார்.

அவரைவிட அதிகமாக இந்தியாவிடம் அன்புகொண்ட ஆங்கிலேயரையோ, அவரினும் மிகுதியாக இந்தியாவுக்கு ஸேவை செய்த ஆங்கிலேயரையோ நாம் கண்டதில்லை.

ஆண்ட்ரூஸ் கல்கத்தா ஆஸ்பத்திரியி லிருந்த சமயத்தில், மகாத்மா காந்தி, சாந்தி நிகேதனில் சிலநாள் ரவீந்தரநாத தாகூரின் விருந்தினராய்த் தங்கிவிட்டுக் கல்கத்தாவுக்குத் திரும்பினர்.

அப்படித் திரும்பியபோது, ரயிலைவிட்டு இறங்கியதும் முதல் காரியமாக, தமது உடன் பிறப்புப் போன்ற தீனபந்துவைக் காண்பதற் காக ஆஸ்பத்திரிக்கு ஓடினர்.

டாக்டர் ரவீந்திரநாத தாகூரின் சாந்தி நிகேதனத்துக்கு மகாத்மாஜி விஜயம் செய்த தும் குருதேவரை அவர் சந்தித்தது பற்றிய சகல வரலாறுகளையும் தமக்குச் சொல்லும்படி ஸ்ரீ ஆண்ட்ரூஸ் வேண்டிக்கொண்டார். கவிஞர் பெயரைப் பிரஸ்தாபித்த போதெல்லாம், தீனபந்துவுக்கு உற்சாகம் பொங்கிற்று. காந்திஜீ என்ன சொன்னலும், “அற்புதம்” “அருமை” “ஜோர்” என்று சொல்லி மகிழ்ந்தார் தீனபந்து.

ஐரோப்பிய யுத்தத்தைப் பற்றியும் தீன பந்து பிரஸ்தாபித்தார். நோயால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த போதும், ஐரோப்பிய

யுத்தத்தைப் பற்றிய கவலை அவரைவிட்டு அகலவில்லை.

பிறகு அவர், பக்தன் கண்ட தரிசனம் போல, தாம் காணும் ஒரு காட்சியை வர்ணித்தார். "பாபுஜீ, சுயராஜ்யம் வந்துகொண்டிருக்கிறது. அது வருவதை நான் காண்கிறேன். இந்தியா விடுதலை யடையப்போகிறது."

காந்திஜி :—"அது எனக்குத் தெரியும்."

ஆண்ட்ரூஸ் :—"உங்களுக்குத் தெரியுமா? என் வியாதியில் எனக்குக் கவலை போய்விட்டது. கடவுளருளால் கஷ்டம்போல் வந்த பாக்கியம் என்று அதை நான் மதிக்கிறேன். அதனால், எனக்கு ஓர் அற்புத அனுபவம் ஏற்பட்டுள்ளது; வேறு விதமாய் அந்த அனுபவம் எனக்குக் கிடைத்தே இராது."

## அத்தியாயம் 9

## கடைசி நாட்கள்

தீனபந்துவின் உயிருக்கு நமனுய் முடிந்த இரண்டாவது ஆப்பரேஷனுக்கு முன், மூன்று நான்கு தடவை அவரை ஸ்ரீ மகாதேவ தேசாய் போய்ப் பார்த்துவந்தார்.

மூன்றும் முறை போய்ப் பார்த்தபோது ஸ்ரீ தேசாயிடம் தீனபந்து ஒரு விஷயங் கூறினுர்:— "என் மனத்தில் பாரமாயிருக்கும் இரண்டொரு விஷயங்களை உங்களிடம் சொல்ல வேண்டும். என்னிடம் ரொம்ப நல்ல மாதிரியாய் நடந்துகொண்ட சின்ன டாக்டரை உங்களுக்குத் தெரியுமே; அவருக்கு பாபுவின் போட்டோ ஒன்று, அவர் கையெழுத்தோடு வேண்டுமென்றுர். தருவதாய் நான் அவருக்கு வாக்களித்துள்ளேன். ஞாபகமாய் நீங்கள் அவருக்கு ஒரு போட்டோ வாங்கித் தர வேண்டும்."

"அவர் பெயர் என்ன?" என்று ஸ்ரீ தேசாய் கேட்டார்.

"எனக்குத் தெரியவில்லை. நர்ஸைக் கூப்பிடுங்கள்" என்றார் தீனபந்து.

"அவர் யாரென்று எனக்கு அவ்வளவு நிச்சயமாய்த் தெரியவில்லை. இருந்தாலும் கண்டுபிடிக்கிறேன்" என்று நர்ஸ் கூறினாள்.

டாக்டரின் பெயரை அவள் கண்டுபிடித்துச் சொன்ன சமயம், ஸ்ரீ தேசாய் கல்கத்தாவையே விட்டுப் புறப்படவேண்டியதாய் இருந்தது. இருந்தாலும், "அவருக்குப் போட்டோவை எப்படியாவது அனுப்பிவிடுகிறேன்" என்று சொல்லிச் சென்றார் ஸ்ரீ தேசாய்.

இரண்டாவது ஆப்பரேஷன் நடந்த தினத்தில், ஆப்பரேஷனுக்கு ஒரு மணி நேரமிருக்கும்போது ஸ்ரீ தேசாய் மீண்டும் அவரைச் சந்தித்தார். காந்திஜி, ராஜகுமாரி இருவரின் செய்திகளையும் தங்கள் யாவருடைய பிரார்த்தனைகளையும் அவருக்கு ஸ்ரீ தேசாய் தெரிவித்தார்.

தீனபந்துவின் முகம் மலர்ந்தது. புன்சிரிப்புடன் கூறினார்:—'என் தாடி, மீசைகளையெல்லாம் சிரைத்துவிட்டார்கள், மகாதேவ்! அவை அடியோடு போய்விட்டன."

"குருதேவ் கூடத்தான் அவற்றை இழக்க நேரிட்டது. உங்களுக்கு ஞாபகமில்லையா? அதனால் ஒன்றும் கெடுதியில்லை" என்று ஸ்ரீ தேசாய் ஆறுதல் கூறினார்.

பிறகு, தீனபந்து சொன்னார்: "மகாதேவ்! எனக்கு என்ன நேர்ந்தாலும் சரிதான்; அந்தச் சின்ன டாக்டரை மறந்துவிடாதீர்கள். பாபுவின் கையெழுத்திட்ட ஒரு போட்டோ அவருக்குக் கொடுக்கவேண்டும்."

தாம் கடன்பட்ட சேவலை, ஞானி ஸாக்ரடீஸ் மறந்துபோனாரோ: இல்லையல்லவா? அப்படியிருக்க, சின்ன டாக்டருக்குத் தாம் பட்ட கடனை, தீனபந்து மட்டில் எப்படி மறப்பார்?

போட்டோவைக் கொண்டு போகாததால் ஸ்ரீ தேசாய் வெட்கமுற்றார்.

ஆண்டிரூஸுக்குக் கொடுத்த மருந்து தன் வேலையைச் செய்ய ஆரம்பித்துவிட்டது. அதனால், "என் ஆண்டவனுடன் நான் உறங்கச் செல்லுகிறேன்" என்று அவர் கூறிச்சென்றார்.

மரணப்படுக்கையி லிருக்கையிலும் அவரது தங்க ஹ்ருதயம் அவ்வளவு அன்பும் கடமைப்

பற்றுதலும் நிரம்பி யிருந்தது என்று குறிப்பிடவே, ஸ்ரீ தேசாய் சொல்லியுள்ள இச்சம்பவங்கள் இங்கே குறிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது ஆப்பரேஷனுக்குப் பின்னர், தீனபந்துவின் நிலை க்ஷீணமுற்றது. அதிலிருந்து அவர் மீளவேயில்லை. 1940-ஆம் வருடம் ஏப்ரல்மீ 5உ நண்பர்கள் புடைசூழ, அமைதியும் சாந்தமுமாகவே, அவரது ஆவி பிரிந்தது. ஆண்ட்ரூஸின் ஆப்த தோழரான கல்கத்தா பிஷப், அவர் ஆவி பிரியும்போது கூடவே யிருந்தார். பிரேத அடக்கக் கிரியைகளையும் அவரேயிருந்து நடத்திவைத்தார். பல வகுப்பு, சமூகங்களையும் சேர்ந்த ஏராளமான மக்கள், அக்கிரியைகளின்போது கூட விருந்து கண்ணீர்விட்டது உருக்கமான காட்சியாகும். சவப்பெட்டிமீது பலர் அனுப்பிய புஷ்பஹாரங்கள் குவிந்தன. அவற்றுள் ஒன்று மகாத்மாஜீ அனுப்பியதாகும்.

இவற்றுளெல்லாம் மிகவும் குறிப்பிடத் தக்கது, தீனபந்து முன்னெச்சரிக்கையாகத் தயாரித்து வைத்துச் சென்ற அரிய இறுதிச் செய்தியாகும்.

கடைசி ஆப்பரேஷன் நடக்கப்போகு முன்பு தீனபந்து ஆண்ட்ரூஸ் பின்வரும் அந்தக் கடைசிச் செய்தியை டாக்டர் ஏ. சக்ரவர்த்தியிடம் சொன்னார். அவர் அச்செய்தியை எழுதிக்கொண்டார். மரணம் நேர்ந்துவிட்டால் அச்செய்தியை வெளியிடும்படி ஸ்ரீ ஆண்ட்ரூஸ் டாக்டர் சக்கரவர்த்தியிடம் கூறினார். செய்தி பின்வருமாறு:—

“நான் இந்த ஆப்பரேஷன் செய்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்தது முதல், கடவுளைப்பற்றியே சதா சிந்தித்துக் கொண்டிருந்தேன். அவனன்றி ஓரணுவும் அசையாது. ‘தங்கள் சித்தம் நிறைவேறட்டும்’ என்று கடவுளை நோக்கித் தினமும் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தேன். குருதேவர் தாகூரைப் பற்றிய நினைப்பும், சாந்திநிகேதனத்தில் நான் அறிந்துகொண்ட விஷயங்களும், மகாத்மா காந்தியின் நினைப்பும், இத்தனை வருஷ காலமாக மகாத்மாவிடம் நான் அறிந்து கொண்ட விஷயங்களும் எனக்குச் சாந்தி அளித்தன. மெட்ரோபாலிட்டன் (பிரதம பாதிரியார்) தினமும் ஆஸ்பத்திரிக்கு வந்து என்னைக் கண்டது, எனது கஷ்டத்தையும்

பலவீனத்தையும் அகற்ற மருந்தாய் இருந்தது. இத்தினங்களில் அவரிடம் எனது நேசம் முற்றியது. இந்தியாவையும் உலகத்தையும் நேசிப்பதில் அவரது இருதயமும் எனது இருதயமும் ஒன்றென்பதை நான் கண்டேன்.

"நண்பர்களை நேசிப்பதே எல்லாப் பாக்கியங்களிலும் சிறந்த பாக்கியமாகும். அந்தப் பாக்கியத்தை எனக்கு எனது வாழ்க்கையில் கடவுள் அளித்திருக்கிறார். கடவுளின் கையில் எனது உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒப்புவித்திருக்கும் இப்பொழுது, இந்தியாவிலும் உலகின் பல பாகங்களிலும் நண்பர்களை நான் படைத்திருப்பதை நினைவுகூர விரும்புகிறேன். இந்தியாவில் சமீபத்திலிருக்கும் நண்பர்களுக்கு நான் இதுவரை கடிதம் எழுதிவிட்டேன். எனது அருமைத் தாய்நாடான இங்கிலாந்திலிருக்கும் எனது நண்பர்களைப்பற்றி எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அவர்கள் அடிக்கடி கடிதங்களும் தந்திகளும் அனுப்புவதோடு எனக்காகப் பிரார்த்தனை செய்தும் ஆன்ம பலத்தைக் கொடுக்கிறார்கள். இதே மாதிரி உலகின் இதர பாகங்களிலுள்ள நண்பர்களும் ஆன்ம பலத்துக்கு உதவிவருகிறார்கள்.

"இந்த ஆஸ்பத்திரியில் நான் படுத்துக் கொண்டிருக்கையில் எனது பிரார்த்தனைகள், எனது கஷ்டங்களைப்பற்றியன மட்டும் அல்ல. எனது கஷ்டங்கள் அவ்வளவு முக்கியமல்ல. மனிதவர்க்கம் பூராவும் கஷ்டப்படுவதுபற்றியே நான் பிரார்த்தனை செய்கிறேன். கடவுளின் ராஜ்யம் வரவேண்டுமென்றும், பரமண்டலத்தில் நடப்பதுபோலவே இப்பூமியிலும் கடவுள் சித்தம் நிறைவேற வேண்டுமென்றும் நான் ஒவ்வொரு நிமிஷமும் பிரார்த்தனை செய்கிறேன்."

## அத்தியாயம் 10

## தேசத்தின் துயரம்

தீனபந்துவின் மரணம் தேச முழுவதையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. பற்பல தலைவர்களும் பொதுமக்களும் தங்கள் துக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். ஆண்ட்ரூஸின் அரிய குணங்களையும் சேவைகளையும் பாராட்டாதவர் கிடையாது. சில முக்கியத் தலைவர்களுடைய புகழுரைகளின் சாரம் மட்டில் இங்கே திரட்டித் தரப்பட்டிருக்கிறது.

மகாத்மா காந்தி (அறிக்கை):—"ஸ்ரீ ஸி. எப். ஆண்ட்ரூஸின் மரணத்தால் இந்தியா மட்டிலுமன்று, மனித குலமே ஒரு உண்மைப் புதல்வனையும் ஊழியனையும் இழந்துவிட்டது. எனினும், அவரது மரணம், அவருக்குத் தேக உபாதையினின்றும் விடுதலையாகும்; அவரது வாழ்வு லட்சியத்தின் பூர்த்தியுமாகும். அவருடைய எழுத்துக்களை நேரே படித்துப் பயன்பெற்ற ஆயிரக்கணக்கான மக்களின்

மூலமாக ஸ்ரீ ஆண்ட்ரூஸ் நீடுவாழ்வார். எனது அபிப்பிராயத்தில், ஆங்கிலேயர்களுக்குள்ளே மிக்க உயர்ந்தவரும் சிறந்தவருமான உத்தமர் களில் சார்லி ஆண்ட்ரூஸுடம் ஒருவர். அவர் இங்கிலாந்தின் உண்மைப் புதல்வரானதால், இந்தியாவின் உண்மைப் புதல்வரும் ஆகிவிட் டார். அவர் செய்த சேவையெல்லாம், மனித குலத்துக்காகவும், அவரது ஆண்டவனும் எஜமானுமான ஏசு கிறிஸ்துவுக்காகவுமே செய் தார். ஸி. எப். ஆண்ட்ரூஸைவிடச் சிறந்த மனிதரையும், சிறந்த கிறிஸ்தவரையும் நான் அறிந்ததில்லை. 'தீனபந்து' என்ற பட்டத்தை இந்தியா அவருக்கு அளித்தது. அதற்கு அவர் தகுதிவாய்ந்தவர். ஏனெனில், எல்லா நாடு களிலுமுள்ள ஏழைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர் களுக்கும் அவர் உண்மை நண்பனுயிருந்தார்."

* * *

மகாத்மா காந்தி (ஹரிஜன் கட்டுரை) :— "என்னைப்போல ஸ்ரீ ஆண்ட்ரூஸை அதிக அந்நியோன்னியமாகப் பிறர் அறிந்திருக்கமாட் டார்கள் என்றே நம்புகிறேன். குருதேவ், அவ ருக்கு ஆசார்ய புருஷராக விளங்கினர். தென் னுப்பிரிக்காவில் நாங்கள் சந்தித்தபோது சகோ தர பாவத்துடனேயே நாங்கள் நடந்துகொண்

டோம். அந்தச் சிநேக பாவம் கடைசிவரை நீடித்தது. அங்கே ஏற்பட்ட நட்பு ஓர் ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் ஏற்பட்ட நட்பல்ல; சத்திய சோதனைக்காக ஊழியம் செய்யும் இருவருக்கிடையே ஏற்பட்ட பிரிக்க முடியாத பந்தமே அந்த நட்பு. அவரைப்பற்றிய எனது பழைய ஞாபகங்களை நான் இங்கே சொல்ல வரவில்லை. அவை மகா புனிதமானவை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயரும் சரி; இந்தியரும் சரி; அவர் விட்டுப்போன வேலை என்ன வென்பதையே எண்ணிப் பார்க்க வேண்டும். ஆங்கிலேயர் ஒருவர் எவ்விதம் இங்கிலாந்தை நேசிக்க வேண்டுமோ அவ்விதம் அதை அவர் நேசித்தார்; அதைப்போலவே, இந்தியர் ஒருவர் இந்தியாமீது எவ்விதப்பற்றுக் கொள்ளவேண்டுமோ அவ்விதமே இந்தியாவிடத்தும் அவர் பற்றுக் கொண்டிருந்தார். அவர் தமது மரணப்படுக்கையில் இருந்தபோது, பின்வருமாறு என்னிடம் கூறியதைக் கவனிக்க வேண்டும்: '**மோஹன்! சுயராஜ்யம் சித்திக்கப் போகிறது. ஆங்கிலேயரும் இந்தியரும் ஒருங்கே மனம் வைத்தால் சுயராஜ்யம் சித்தித்துவிடும்**' என அவர் கூறினர். ஆம், அவர் உண்மையே சொன்னர். இப்போது நம்மை ஆளுவோருக்

கும் ஆங்கிலேயரில் பலருக்கும் ஆண்ட்ரூஸ் புதியவர் அல்ல. அவரது அபிப்பிராயத்துக்கு மதிப்பு உண்டு. ராஜீய ஞானமுடைய இந்தியர் ஒவ்வொருவரும் அவரை அறிவார்கள்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயர் இழைத்த தீங்குகளை நான் எண்ணப்போவதில்லை. அவற்றை ஒருநாள் நாம் மறந்துவிடுவோம். ஆனால் ஆண்ட்ரூஸ் செய்த அரிய வீரச் செயல்களில் எதையும் நாம் மறக்க முடியாது. இந்தியாவும் இங்கிலாந்தும் நிலைத்திருக்கும் வரை அவரது செயல்களும் ஜனங்களின் மனத்தில் வேரூன்றி நிற்கும். ஆங்கிலேயரில் சிறந்த உத்தம புருஷராக ஆண்ட்ரூஸ் விளங்கியதால், நாம் ஆங்கிலேயர் விஷயத்தில் துவேஷம் கொள்ளவே காரணம் இல்லை. உண்மையிலே, சிறந்த ஆங்கிலேயரும் சிறந்த இந்தியரும் ஒன்றுகூடினால், இருதரப்பாருக்கும் ஹிதமான ஓர் ஒப்பந்தம் ஏற்படாதவரையில் அவர்கள் பிரியமாட்டார்கள்.

"ஆண்ட்ரூஸ் விட்டுப்போன வேலைகளை நாம் மேற்கொண்டு இயற்ற முயலுவது முற்றிலும் பொருந்தும். அதைப்பற்றித்தான் நான் இப்போது சிந்தித்து வருகிறேன். கருணை

நிறைந்த ஸ்ரீ ஆண்ட்ரூஸின் முகத்தை நான் என் மனத்தில் நினைக்கும்போதெல்லாம், உலக சாம்ராஜ்யத்தில் இந்தியா தக்க பதவி பெற அவர் அன்புடன் ஆற்றிய கணக்கற்ற காரியங்களை நான் எண்ணும்போதெல்லாம், அவர் விட்டுப்போன வேலைகளைத் தொடர்ந்து செய்வதே சரியென்று கருதுகிறேன்."

*   *   *

மெட்ரோபாலிடன் (பிரதம பாதிரியார்) :— "பல ஐரோப்பியர்களுக்குக் கீழ்நாட்டாரைக் கண்டால் நிறபேத அசூயை உண்டென நாம் வெட்கத்துடன் ஒப்புக்கொள்ளுகிறோம். சார்லி ஆண்ட்ரூஸிடம் இந்த உணர்ச்சி துளிக்கூடக் கிடையாது. அவருக்கு, சர்வ ஜனங்களும் பரமண்டலத்திலுள்ள ஒரே பிதாவின் குழந்தைகள் ஆவர். அவருடைய அன்பு, பாரபட்சமின்றி எல்லோரிடமும் பிரவகித்தது."

*   *   *

ரவீந்திரநாத தாகூர் :—"ஆண்ட்ரூஸ், கிறிஸ்துவின் உண்மையான பக்தர். மனித குலத்தின் சேவைக்காக ஸ்ரீ ஆண்ட்ரூஸ் தமது ஆத்மாவையே காணிக்கை செலுத்தினர். அந்தக் காணிக்கை நீடூழி நிலவுமென்ற எனது திடமான நம்பிக்கையை, இந்தக் கோயிலின்

முன்பு நான் பகிரங்கமாய்க் கூறுகிறேன்! அவரது சுயநலப்பற்றற்ற தியாகத்தை, எமன் அழிக்க முடியாது; காலம் அடித்துச் செல்ல முடியாது.''

* * *

ராஷ்ட்ரபதி மௌலானா அபுல்கலாம் ஆஸாத்:- "நமது தேசிய இயக்கத்தில் சென்ற 20 வருஷங்களாகத் தீனபந்து ஆண்ட்ரூஸ் செய்துவந்த தொண்டு எனது உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. தீனபந்துவின் நம்பிக்கைகளும் செய்கைகளும் ஏசுநாதரின் உபதேசங்களின் சின்னங்களாக வழங்கின. நமது தேசத்திற்காக அவர் செய்திருக்கும் தொண்டை நமது உள்ளம் என்றைக்கும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கும். அவருடைய மரணத்தை, சர்வதேசங்களுக்கும் ஏற்பட்ட ஒரு நஷ்டமென்றே சொல்ல வேண்டும்.''

* * *

ராஜாஜி :—"தீனபந்து மரணவாயிலிருந்து தப்பிவிடுவார் என்றும், இந்திய மக்களுக்கு அவருடைய கைங்கரியம் இன்னும் சிலகாலம் கிடைத்துவரும் என்றும் நாங்கள் நம்பிக்கை கொண்டிருந்தோம். அந்த நம்பிக்கை இப்பொழுது பாழாகிவிட்டது. தீனபந்துவைவிட

இந்தியாவுக்கு அதிக உண்மையான நண்பர் ஒருவரை நாம் காண்பது அரிது. ஸ்நேகத்துக்கும், கடவுள் பக்திக்கும் அவருடைய ஆத்மா தனிச்சிறப்பைப் பெற்றிருந்தது. எல்லாக் கஷ்டங்களிலும் தங்களுடைய சிநேகிதராகவும் வழிகாட்டியாகவும் பங்காளியாகவும் இருந்து வந்த தீனபந்து ஆண்ட்ரூஸின் மரணம் பல ஜனங்களுக்கு அளவிலா வருத்தத்தைக் கொடுத்துவிடும்."

* * *

லார்டு ஹாலிபாக்ஸ் (மாஜி வைஸிராய் இர்வின் பிரபு):—"ரெவரண்ட் ஆண்ட்ரூஸின் மரணத்தினால் ஆழ்ந்த துக்கம் அடைகிறேன். அவரை எனது நண்பர்களில் ஒருவராய்ப் பெறும் பாக்கியத்தை அடைந்திருந்தேன். சகோதர மனிதர்களுக்காக அவர் புரிந்துவந்த தன்னலமற்ற சேவை கண்டு நான் ஆழ்ந்த வியப்புக் கொண்டிருந்தேன்."

* * *

பண்டித ஜவஹர்:—"அவர் இந்தியாவைத் தமது இரண்டாவது தாய்நாடாக ஆக்கிக் கொண்டார். தம்மால் இயன்ற சிறந்த சேவையை இந்தியாவுக்குப் புரிந்தார். அவரையோ

அவரது மகத்தான சேவைகளையோ இந்தியா ஒரு நாளும் மறக்காது."

* * *

பிலிப் அன்வின் (பிரபல ஆங்கிலப் பிரசுர கர்த்தர்) :—"தமது மரணத்தால் இவ்வளவு ஆழ்ந்த சொந்த துக்கத்தை நமக்கு உண்டாக்கி விடத்தக்க வேறு ஒரு நூலாசிரியரை நாம் அறியோம். அவரிடம் ஆழ்ந்த அன்பைச் செலுத்தாதிருக்க யாராலும் முடியாது. இவரை விட அதிகமாய் இந்தியாவினிடம் ஒரே உறுதியோடு ஆழ்ந்த அன்புகொண்டவரும் தன்னல எண்ணமே துளியும் இல்லாதவருமான ஒரு மனிதரை நான் கண்டதில்லை."

* * *

மாஞ்செஸ்டர் கார்டியன் (பிரபல பிரிட்டிஷ் பத்திரிகை) :—"இதுபோன்ற நாட்களில் நாம் ரெவரண்ட் ஆண்ட்ரூஸை இழக்கலாகாது. அவரைப் போன்றோர் இன்னும் பலர் இருந்தால், நமது இந்தியப் பிரச்னை இன்றிருப்பதுபோல் இவ்வளவு கரடுமுரடாய் இராது. அவர் வாழ்ந்த காலத்தில், அவரைப்போல் கிறிஸ்தவ உணர்ச்சி நிறைந்தவரும் அந்த உணர்ச்சியை இவ்வளவு நன்றாய் அனுஷ்டானத்தில் உண்மையோடு கைக்கொண்டவரும் வெகு சிலரே யிருப்பர்."

## அத்தியாயம் 11

### அவர் நூல்கள்

சிந்தனு சக்தி நிறைந்த தீனபந்து ஆண்ட்ரூஸ், பற்பல பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும் அநேக நூல்களும் எழுதியுள்ளார். எழுத்தைத் தனி உலகமாக அவர் பாவிக்கவில்லை. எழுத்தும் வாழ்வும் அவருக்கு ஒன்ருகவே யிருந்திருக்கிறது. அவர் கர்ம வீரன். ஆதலால், அவர் தமது எழுத்துக்களை, வாழ்வின் ஓர் உபகரணமாகவே கருதினர். அவருடைய எழுத்துத் திறமை எவ்விதத்தும் குறைவானதல்ல. பரிசுத்தமும் அருவி ஓட்டம்போன்ற தெளிவும் உடைய நடை அவருடையது. சிக்கலோ, சிடுக்கோ, அபஸ்வரமோ அதிலே காண முடியாது. நறுக்குத் தெறித்தாற்போன்ற சொற்கள்; அலுக்காத ஓர் இனிப்பு — இவை அவர் நடையின் விசேஷ அம்சங்களாகும். 'கிறிஸ்துவுக்கு என் கடன்,' 'சந்தியா சிந்தனைகள்' என்பன போன்ற நூல்களை இதற்கு முக்கிய உதாரணங்களாய்க் கூறலாம்.

'கிறிஸ்துவுக்கு என் கடன்' என்பது ஒரு விதத்தில் அவருடைய சுய சரித்திரமாகும். கிறிஸ்துவை அவர் என்றோ வாழ்ந்த ஒரு மகான் என்று எண்ணவில்லை. 'ஜீவ புருஷ' ளுகவே கிறிஸ்துவை அவர் மதித்தார். வாழ்வு பூராவும் கிறிஸ்து தத்துவத்தை அனுஷ்டிப் பதே அவருடைய லட்சியமும் முயற்சியுமாக இருந்திருக்கிறது. கிறிஸ்து தர்மத்தை, ஏதோ ஒரு வகுப்பினர் கையிலே சிறைப் பட்டதொரு தத்துவமாக அவர் மதிக்கவில்லை; அதை அவர் மனித குலம் பூராவுக்குமே உரிய ஒரு பேரற மாய்க் கண்டார். மகாத்மா காந்தியின் அருஞ் செயல்களிலும், கவிஞர் தாகூரின் உன்னத நூல்களிலும், தூய முஸ்லீம் ஜாகா உல்லாவின் வாழ்க்கையிலும், சீக்கிய சர்தார் ஒருவரின் சீலத்திலும், நேட்டால் இந்தியரின் சத்தியாக்கிரகத்திலும், பிஜி இந்தியர் துயரத் திலும் கிறிஸ்துவின் சொரூபத்தை அவர் கண் டார். அவரது வாழ்வின் ஒவ்வொரு நிமிஷ மும் கிறிஸ்துவே நினைப்பாய், பரோபகாரமே பிறவிப் பயனுய் அவர் வாழ்ந்திருப்பதை, 'கிறிஸ்துவுக்கு என் கடன்' என்ற சுய சரிதத் திஞல் அறியலாம். தம் வாழ்வின் வரலாறு களைத்தான் அவர் அதிலே வர்ணித்திருக்கிருர்.

ஆனால், அது அப்படித் தோன்றவில்லை. கிறிஸ்துவின் தர்மசித்திரமாகவே அது திகழ்கின்றது. ஆண்ட்ரூஸின் கிறிஸ்து தர்சனம் அந்த நூல்.

'இந்திய சுதந்திரம் - அதன் அவசரம்' என்ற நூலைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். இந்தியா சுதந்திரமடைந்தாகவேண்டும்; அது சுய சக்தியின் வளர்ச்சியாலேயே சித்திக்கும்; அந்த சித்தியளிக்கும் மகா மந்திரத்தை காந்திஜி உபதேசிக்கிறார் - இதுதான் அந்த உணர்ச்சி மிக்க கட்டுரையின் எழுவாய்.

மற்றும், 'இந்தியாவின் மறுமலர்ச்சி,' 'தென்னுப்பிரிக்காவில் இந்தியர்,' 'குடியின் தீமை,' 'வடமேற்கு எல்லைப்புறத்தின் அறை கூவல்', 'கிறிஸ்து சமயமும் தொழிலாளர் பிரச்னையும்,' 'சாது சுந்தர் சிங்,' 'கிறிஸ்துவும் மனிதன் தேவையும்,' 'டேர்ரேன்ஸ் மாக்ஸ்வினி,' 'ஆத்ம வாழ்வு' முதலிய பல நூல்கள் அவர் எழுதியுள்ளார்.

மகாத்மா காந்தியின் 'சத்திய சோதனை,' 'தென்னுப்பிரிக்க சத்யாக்கிரகம்' இரு நூல்களையும் இணைத்து, ஓர் ஆங்கிலக் கம்பெனிக்காக, அழகாக அவர் பதிப்பித்துக் கொடுத்திருக்கிறார்.

அவர் எழுதிய முக்கால் வாசி நூல்களும் ஏராளமான கட்டுரைகளும் இந்தியா சம்பந்தமானவையே யாகும்.

அவரது எழுத்துக்களில் எதுவும் ஆங்கிலத்தின் நிரந்தர இலக்கியத்தில் ஏறுமற் போகலாம். அவர் எழுத்துத் திறமையின் குறைவு அதன் காரணமல்ல. நிரந்தர இலக்கியத்தைப்பற்றி அவர் கவலை கொள்ளவில்லை. 'ஜீவ புருஷ'ரான கிறிஸ்துவிடம் தமது வாழ்வையே அர்ப்பணம் செய்துவிட்ட கர்மயோகியான அவருக்கு, வெறும் இலக்கிய ரசனையில் ஈடுபட நேரம் ஏது? அவருடைய ஜீவியமே ஓர் இலக்கியமாகும். உள்ளத்தின் பரிபூர்ணமும், சாந்தியும், சர்வ சங்க பரித்தியாகமும் நிறைந்தது அவர் வாழ்வு. அந்த வாழ்வுச் சோதியிலே சுடர்விட்டுத் தெறித்து விழுந்த சில தீப்பொறிகள் அவர் நூல்கள். பொறிகள் மங்கிவிடலாம். ஆனல், அவற்றின் ஜனன காரணமான அவரது ஜீவியம் ஓர் அணையா விளக்காகும்.

## அத்தியாயம் 12

## ஆண்ட்ரூஸின் அமுத மொழிகள்

தீனபந்து ஆண்ட்ரூஸின் எழுத்துக்களில் இந்தியாவிடம் அன்பு, மகாத்மா காந்தி வழியில் நம்பிக்கை, பரிசுத்தமான கிறிஸ்து மத பக்தி இம் மூன்றும் நிரம்பியிருந்தன. அவருடைய அமுத மொழிகள் சிலவற்றை இங்கே தொகுத்து மொழிபெயர்த்துத் தருகிறோம் :

### காந்திஜி பெருமை

'இந்திய சுதந்திரம் — அதன் அவசரம்' என்ற நூலில், காந்திஜியைப்பற்றி, அவர் கூறுவதாவது :—

"மகாத்மா காந்தி, எரிமலைபோன்ற புருஷன் ; முதன்மையான தர்மாத்மா. சுதந்திரத்தின் ஜீவரசம் ததும்பும் சக்தி நம்முள்ளிருந்து தான் வெளிப்பட வேண்டும் ; இதுவரையில் அது நம்முள்ளே மறைந்து கிடந்தது. அந்தச் சக்தியை வெளிப்படுத்தி யருளினவர் மகாத்மா காந்தி. வெளி உதவிகளையே நம்பிக்கொண்டு

நில்லாமல், நம் சக்தியையே நாம் சார்ந்திருக்குமாறு நமக்கு அவர் கற்பித்தார். மகாத்மா காந்தியின் அழைப்பை, என் இதயம் பரிபூர்ணமாய் ஏற்றுக்கொண்டுவிட்டது. இவர் காட்டும் மார்க்கத்திலே சென்றால், இறுதியில் நாம் நிச்சயம் விடுதலை பெற்றுவிடலாம் என்று நான் பெரிதும் நம்புகிறேன்.''

அதே நூலில் மற்றோரிடத்தில் தீனபந்து கூறுகிறார் :—

"மகாத்மா காந்தி, வியாதியை வேரிலே நறுக்குவதை நான் காண்கிறேன். உண்பதற்குச் சுகமான மருந்துகளைக் கொடுக்கும் வைத்தியரல்ல அவர்; ரண சிகிச்சை செய்யும் வைத்தியரைப் போன்றவர். அவருடைய கத்தி ஆழமாக வெட்டுகிறது. ஆனால், உடனே அதனால் நோயாளிக்கு இனிமை பிறப்பதைக் காண்கிறோம். அதாவது, இந்தியாவுக்கு மானமும் ஆண்மையும் சுதந்திர மனோபாவமும் ஏற்பட்டு வருகின்றன. 'அன்னியர் ஆட்சியை இங்கே பாதுகாப்பதற்கு நாம் உதவிசெய்தல் வெட்கத்துக்கு இடம்' என்பதை இந்திய ஜனங்கள் உணர்ந்துவருகின்றனர்.''

## பிரிட்டிஷார் பிரமை

டெர்ரென்ஸ் மாக்ஸ்வினி என்ற அயர்லாந்து வீரன், சிறையில் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த தியாகி யாவார். அவருடைய சரித்திரத்தை ஸ்ரீ ஆண்ட்ரூஸ் மிகவும் உருக்கமாகவும், இந்திய நிலைமைகளை இடையிடையே பெரிதும் ஒப்பிட்டும் 1922-ஆம் வருஷத்தில் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதில் ஓரிடத்தில் அவர் கூறுவதாவது :—

"பிரிட்டிஷாரின் மனத்தில் ஒரு விசித்ரமான பிரமை இருந்துவருகிறது. உலகத்திலே இதற்கு முன்னிருந்த சகல ஏகாதிபத்தியங்களையும் போலில்லாமல், வேறு விதமாயிருக்கிறதாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்! கிரேட் பிரிட்டனால் ஜயிக்கப்பட்டு, அடிமைத்தனத்தில் வைத்து ஆளப்படும் தேசங்களுக்கெல்லாம், தங்கள் சுதந்திரத்தை இழந்ததாகவே தோன்றவில்லையாம்; சுயேச்சை வேண்டுமென்று அவை ஆசைப்படவும் இல்லையாம்!—இதுதான் பிரிட்டிஷாரின் பிரமை. தங்களால் ஜயிக்கப்பட்ட அத்தகைய நாடுகளில், சுயேச்சை என்று வாயால் சொல்லுவதுகூட ராஜத் துவேஷம் என்றும், அரசியல்

விடுதலைக்கு அந்தத் தேசங்கள் போராடுவது ராஜத் துவேஷக் கலகம் என்றும் பிரிட்டிஷார் நினைக்கிறார்கள். ஐரோப்பிய யுத்தத்துக்குப் பிறகு கூட, பிரிட்டிஷாருக்கு இந்தப் பிரமை இருந்துவருவதுதான் இன்னும் அதிசயமாகும். மன்னாதி மன்னர்களும், சக்கரவர்த்திகளும், ஜார்களும், ராஜாக்களும் ராணிகளும், கோமான்களும் சீமாட்டிகளும் அட்டை வீடுகளைப்போல் சாய்ந்துவிட்டதைப் பார்த்தபிறகும், ஐரோப்பாவிலே அதிவிரைவாய் எண்ணற்ற குடியரசுகள் ஸ்தாபிதமாகி வருவதைக் கண்ட பிறகும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக்குள்ளே மட்டில் யுத்தத்துக்கு முன்பிருந்ததுபோலவே சகல சங்கதிகளும் துளியும் மாறாமல் அப்படியே யிருந்து வருமென்று பிரிட்டிஷார் நினைக்கிறார்கள்!"

## சுய நிர்ணய உரிமை

இன்று மகாத்மாஜியும் காங்கிரஸும் வற்புறுத்தும் நமது சுயநிர்ணய உரிமையை, அப்போதே மேற்கண்ட நூலில், தீனபந்து பின்வருமாறு வற்புறுத்தியிருக்கிறார் :—

"சுதந்திரத்தில் வாஞ்சையுடைய மக்கள் என்பதாக உலகத்தோரால் மதிக்கப்படவேண்டும் என்று கிரேட் பிரிட்டன் விரும்புமானால்,

பிறரைச் சுரண்டியும் ஹிம்சித்தும் வாழ்வோர் என்ற பெயரை பிரிட்டிஷார் வாங்காதிருக்க வேண்டுமானால், பலவந்தமாய் எந்த நாட்டின் மீதும் தாங்கள் ஆதிக்கம் செலுத்தலாகாது; அவ்வித ஆதிக்கம் தற்காலத்துக்கு ஒவ்வாத தாகும். ஒவ்வொரு நாட்டாரும், தத்தமக்கு வேண்டிய சொந்த அரசியல் அமைப்பைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் சுதந்திரமும் உரிமையும் அடைய வேண்டும். அந்த உரிமையை பிரிட்டன், பயபக்தியோடு மதித்து நடக்கவேண்டும். இதைச் சாதித்து முடிக்கவேண்டுமானால், பிரிட்டன் தனது ஏகாதிபத்திய பிருதுகளை யெல்லாம் அடியோடு விட்டொழித்து, பல சுதந்திர தேசங்களுக்கு நடுவே தானும் ஒரு சுதந்திர தேசமாய் வாழத் தயார் ஆகிவிடவேண்டும்; அந்தத் தேசங்களின் எஜமானியாய் வாழலாகாது.

"பிறப்பினால் நானும் ஓர் ஆங்கிலேயன் ஆதலாலும், என் சொந்த நாட்டை நான் நேசிக்கிறேன் ஆதலாலும், இங்கிலாந்துக்கு—என் இங்கிலாந்துக்கு — இதைவிட வேறு உன்னத பாக்கியம் இருக்க முடியுமென்று நான் ஆசைப்பட வியலவில்லை."

## அஹிம்சா தர்ம ஆதி மகான்

'அஹிம்சா தர்ம வேதாந்தம்' என்ற ஒரு கட்டுரையில், தீனபந்து கூறுகிறார்:—

"முதன் முதலாக அஹிம்சா தர்மத்தை அகில ஜனங்களும் கைக்கொள்ளக்கூடியவாறு உபதேசம் செய்தவர் புத்தர் பெருமான்தான். கிறிஸ்து பிறக்க ஐந்நூறு வருஷங்கள் முன்னதாகவே புராதன இந்தியாவிலே அவர் உபதேசித்தார். பலாத்காரத்தைவிடத் தம்து தெய்விகமான கருணைசக்தியே மிக உயர்ந்ததென்று, சர்வ ஜனங்களும் அனுஷ்டிக்கத்தக்க பொதுத் தத்துவமாய், மனித குலத்துக்கு அவரே முதன் முதலாய் அதை நிரூபணம் செய்தார்.

"இந்த நவீன உபதேசம் எவ்வளவு விரைவாய்ப் பல திக்குகளிலும் பரவியது! அதைப் பார்க்கும்போது மகா ஆச்சர்யமாயிருக்கிறது. காசியிலிருந்து வடக்கே காஷ்மீரம் வரையில் அது எட்டிவிட்டது. அதற்கப்பால் மத்திய ஆசியாவுக்குள்ளும் புகுந்தது. ஆனல், தென் கிழக்குத் திசையிலேதான் அது மிக அதிக தூரம் பரவிற்று.

ஜாவாவிலே புத்த மகான் குன்று என்று அர்த்தமுள்ள போரோ புதூர் என்ற மலையிலே,

கௌதமரின் ஜீவியத்தையும் உபதேசங்களை யும் சித்தரித்த அழியாச் செல்வமான சிற்பங் கள், மைல்கணக்கான தூரம் செதுக்கப்பட் டிருப்பதை நான் கண்டிருக்கிறேன். இறுதி யிலே, புத்தரின் இந்தத் தூதர்கள், சைனு, கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் சென்றூர்கள்.

"இந்த நூதன சித்தாந்தம் பரவியிருந்த நவ சகாப்தம் ஆயிரம் வருஷங்களுக்கு மேலே பூரணக் கொழிப்புடன் நிலைத்திருந்தது. கிறிஸ் துவுக்குப் பின் இருநூற்றைம்பது வருஷங் களுக்குப் பிறகு தோன்றிய அசோக சக்கர வர்த்தியின் உள்ளத்தையும் அது கவர்ந்தது. தமது சாம்ராஜ்யம் முழுவதிலும் பூர்ண சாந்தி நிலவுமாறு அவர் ஆட்சிபுரிந்தார். இவ்வளவு அபூர்வ சக்தி பெற்றிருந்தது புத்தரின் உபதேசம்."

## இந்தியக் கலைகளின் மறுமலர்ச்சி

'இந்தியாவின் கலாச்சார மறுமலர்ச்சி' என்ற தலைப்புடைய மற்றொரு கட்டுரையில், ஆண்ட் ரூஸ் எழுதுவதாவது :—

"நாம் பத்தொன்பதாம் நூற்றூண்டைத் திரும்பிப் பார்ப்போமானல் ஒரு விஷயம் புலனு

கும். பிரிட்டிஷ் ஆட்சி வங்காளத்திலும் சென்னையிலும் ஆரம்பித்து, நாட்டின் இதர பாகங்களுக்கும் பரவியது. பிரிட்டிஷ் ஆட்சி இப்படிப் பரவத்தொடங்கியது முதல், ஓர் ஆச் சர்ய சம்பவத்தைக் காண்கிறோம். அம்மாதிரி நிலையில் அது எங்குமே வழக்கமாய் நிகழ்வது தான். பிரிட்டன் தன்னிடம் வந்து மோதிய ஆச்சர்யத்தாலும் புதுமையாலும், இந்தியா விலே அதிசய விழிப்பு ஒன்று முதலிலே ஏற்பட்டது. அதன் பலனாய், எதற்கெடுத்தா லும் மேல் நாட்டை நகல் செய்யும் பயனற்ற தோர் ஆவல் தோன்றியது.

"மேல்நாட்டு இலக்கியங்கள் கூட, மும் முரமாய் நகல் செய்யப்பட்டன. மதுஸூதன தத்தரை வங்காளத்தின் 'மில்டன்' என்று அழைத்தார்கள். பங்கிம் சந்திரர் வங்காளி நாவலாசிரியர்களுக்குள் 'வால்டேர் ஸ்காட்' ஆகிவிட்டார். ரவீந்திரநாத தாகூருக்கு, அவ ரது வாலிப வயதிலே, வங்காளக் கவிதையின் 'ஷெல்லி' என்று பெயர் சூட்டினார்கள். இவ் வாறாக, முதன் முதலிலே, அந்நிய மோஸ்தரி லேயே சகல இலக்கியமும் சிருஷ்டிக்கப் பட்டன. இந்த நிகழ்ச்சி, இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலுமே நேர்ந்தது.

“ஆனல், அந்த எழுச்சியின் இறுதியான முடிவு இதுவல்ல. ஏனெனில், வெகு சீக்கிரத்திலேயே, உண்மையானதோர் இலக்கிய இயக்கத்திற்குரிய சுதேசீய உற்சாகமொன்று எழுந்தது; ஓர் உண்மையான கலாச்சார மறுமலர்ச்சி உன்னதமானதொரு ரூபத்தோடு தோன்றியது. கடைசியாக இப்போது, மேல்நாட்டை நகல் அடிக்கும் வழக்கம் ஒதுக்கித் தள்ளப்பட்டது. கவிஞரும் எழுத்தாளரும் கலைஞரும், தங்களுக்குச் சொந்தமான சுய சக்தியை அறிந்துகொண்டார்கள். மூன்ரும் தரமான ஆங்கிலக் கவிகளை இயற்ருமல், மூன்ரும்தரமான ஆங்கிலச் சித்திரங்களை வரையாமல், மூன்ருந்தரமான ஆங்கில கீதங்களைப் பாடாமல், அவர்கள் இப்பொழுது தங்கள் பூர்ண சக்தியோடும் தங்கள் சொந்தமான உன்னத இலக்கியம், கலை, சங்கீதங்களைச் சிருஷ்டித்து வருகிருர்கள். தங்கள் சொந்த ஜனங்களின் அந்தராத்மாவோடு பரிபூர்ணமாய் ஒன்றி ஐக்கியமாக அவர்கள் முயன்றுள்ளார்கள். தாங்கள் இரண்டாந்தரமான அல்லது மூன்ருந்தரமான ஐரோப்பியர்களாய் இருக்க விரும்பாமல், இந்தியர்களாய் இருப்பதிலேயே அவர்கள் இப்போது பெருமை கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.”

## பிரார்த்தனை

'சந்தியா சிந்தனைகள்' என்ற நூலில் அடங்கியுள்ள ஸ்ரீ ஆண்ட்ரூஸின் பிரசங்கங்களுள் ஒன்றில் அவர் பின்வருமாறு கூறுகிறார் :—

"என்னைச் சிலர் அடிக்கடி பின்வரும் கேள்வியைக் கேட்கிறார்கள் : 'கடவுளோ சர்வக்ஞர்; சர்வ சக்திமான். நமக்கு எது நன்மை என்று அவருக்கு மிக நன்றாய்த் தெரியும். அப்படியிருக்க, எனக்கு இதை அருளும், அதை அருளும் என்று கடவுளை நாம் பிரார்த்திப்பதனால் என்ன பயன்? எல்லாப் பாரத்தையும் அவர் கையிலே ஒப்படைத்துவிட்டு, பிரார்த்தனைக்குப் பதிலாய் அமைதியான தியானத்திலே நமது காலத்தை நாம் ஏன் கழிக்கலாகாது?'

"நானும் என் பதிலை மற்றோர் கேள்வி ரூபத்திலேயே தருகிறேன். ஒரு தகப்பனுக்கு மகா வாஞ்சையான ஒரு புத்திரன் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அந்தக் குழந்தையை உயிருக்குயிராய் அவர் நேசிக்கிறார். அப்பேர்ப்பட்ட குழந்தை தம் அருகே வந்து முட்டாள்தனமாகவாவது ஒரே ஒரு கேள்வியைக்கூடத் தம்மிடம் கேட்காமல், ஒரே

ஒரு வேண்டுகோளைக்கூடத் தம்மிடம் செய்து கொள்ளாமல் இருக்குமானல், அந்தத் தந்தைக் குச் சந்தோஷமாக இருக்குமா? எட்ட நின்ற படியே பந்துத்துவம் கொண்டாடிக் கொண் டிருப்பது குழந்தைக்குத்தான் நல்லதா? தந்தைக்குத்தான் நல்லதா? இல்லவேயில்லை யன்றோ!"

## சந்யாச இந்தியா

1928-ஆம் வருஷம் ஜனவரி மாதம் குஜரத் வித்யாபீடத்தில் பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் செய்கையில், தீனபந்து புகன்ருர் :-

"ஏகமான பரம்பொருளைத் தேடுவதிலே எண்ணற்ற யுகங்களாக ஈடுபட்ட தேசாந்திரி யாய் வாழ்ந்துவருகிறது இந்தியா. அந்த ஏகப் பொருளைத் தேடுவதிலே, இந்தியா இம்மையின் போக பாக்கியங்களை யெல்லாம் உதறித் தள்ளி விட்டு, சந்யாச காஷாயத்தை அணிந்து கொண்டுளது. மண்ணுலக பாக்கியங்களிலே திருப்தி கொண்டவர்கள், இந்தியாவைப் பழிக்கலாம். ஆனல், சத்தியப் பொருளை யன்றி வேறெதனலும் திருப்தி கொள்ளாத நாமோ, அதற்கு வணக்கமே செலுத்துவோம்; நமது சுதேசியமான கல்வி ஸ்தாபனங்கள்

தரித்திருக்கும் கிழிந்து கந்தலான காஷாய உடைக்குங்கூட வணக்கமே செலுத்துவோம். அவற்றின் வறுமையே நமது ஆனந்தமாகும்; நமது பெருமையும் ஆகும். ஏனெனில், அநாதிப் பொருளின் காதல் கீதத்தின் எதிரொலி அந்தக் கல்வி ஸ்தாபனங்களின் உள்ளங்களிலே முழங்குகின்றது."

# விஷ விருக்ஷம்

**310-பக்கங்கள் :: :: விலை ரூ. 1—8—0**

**பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர்**

வங்காளியில் எழுதியதன் தமிழ் மொழிபெயர்ப்பு

**ஸ்ரீ த. நா. குமாரசுவாமி, பி.ஏ.,**

மிக்க அழகாய் மொழிபெயர்த்தவர்

## பத்திரிகைகளின் புகழுரைகள்

ஜோதி:—சம்பவங்கள் கண்முன் நடப்பவைபோல், துரிதமாக ஒன்றன்பின் ஒன்றாக வந்து, வாசகர்கள் மனத்தைக் கவர்ந்து, கதை முடியுமுன், கீழே வைக்க முடியாதபடி செய்கின்றன.

ஜயபாரதி:— * முதல் நூலிலிருந்த நயத்தையும், அழகையும், வர்ணனையையும் இம் மொழிபெயர்ப்பில் இருப்பதைவிட அழகாக மொழிபெயர்க்க முடியாது.

தினமணி:— * ‘நகேந்திர தத்தன் படகில் செல்லப் புறப்பட்டான்’ என்ற வரியைப் படிக்கத் தொடங்கிவிட்டால் போதும்; புஸ்தகத்தை முடிக்கும்போதுதான் ஒரு ரஸிகன் மூச்சுவிடுவான். அத்தகைய மோகன சக்தியுடன் கதை செல்கிறது.

மணிக்கொடி:—* கதை சுவாரஸ்யம் என்று சொல்லி விட்டால் மாத்திரம் போதாது. அதில் அங்கங்கே சித்தரிக்கப்பட்ட வர்ணனைகளும், கம்பீரமான கற்பனைகளும் மிகவும் இன்புறுத்துகின்றன. * இலக்கிய மணம் கமழும்படி, இனிய நடையில், ரொம்ப அழகாக மூலத்திலிருந்து கொண்டுவந்திருக்கிறார்.

தாருல் இஸ்லாம்:— * இக்கதையை மிகத் திறம்பட வரைந்திருக்கிறார். கதைப்போக்கு படிப்பவர் உள்ளத்தை மேன்மேலும் தூண்டி ஈர்த்துக்கொண்டே செல்லக்கூடியதாய் அமைந்திருக்கிறது. தமிழ் மக்கள் இந்த நவீனத்தைப் படித்துப் பெரிதும் பயன்பெறுவார்களாக.

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

# ஆனந்த மடம்

பங்கிம் சந்த்ரர் வங்காளியில் எழுதியது.

## ஸ்ரீ த. நா. குமாரசுவாமி, பி. ஏ.,

தீத்திக்கும் வண்ணம் மொழிபெயர்த்தது.

ரூ. **1—4—0**

இதைப்பற்றிய முக்கிய அபிப்பிராயங்கள்

**The Hindu:**— The translation into Tamil *has been done remarkably well.*

**தனவணிகன் :**— * *தமிழ் மக்கள் அவசியம் படிக்கவேண்டிய நூல்களுள் இது ஒன்று. மொழிபெயர்ப்பு அருமையாய் இருக்கிறது. கண்கவர் முறையில் அமைந்த புத்தகம்.*

**கலா சேவகி :**— *சொல் அமைப்பு இலகுவாயும், கற்பனை வெகு நேர்த்தியாயும், கதைப்போக்கு விருவிருப்பாயும் இருக்கிறது.*

**நவசக்தி :**— *இந்தியாவுக்குச் சுதந்திர உணர்ச்சி ஊட்டியது ஆனந்த மடம். மொழிபெயர்ப்பு நன்றாயிருக்கிறது.*

**ஹனுமான் :**— *இக் கதையின் போக்கே நூதன வசீகரம் படைத்தது. தேசீய ஆவேசத்தை ஊட்டும் இந்த நவீனத்தைப் படிக்கும்போது, ஒரு கதையைப் படிப்பதுபோன்ற உணர்ச்சியே நமக்கு ஏற்படவில்லை. மொழிபெயர்ப்பு என்ற எண்ணமும் நமக்கு உண்டாகவில்லை. எளிய லளிதமான தமிழ்நடை. உயர்ந்த நாவல். நல்ல மொழிபெயர்ப்பு.*

**மணிக்கொடி :**— *பங்கிம் பாபுவின் மூலத்திலுள்ள வேகம் பூராவையும் கொண்டுவந்திருக்கிறார். அழகான வர்ணனைகளை நன்றாக மொழிபெயர்த்திருக்கிறார்.*

**கலைமகள் :**— *வர்ணனைகள் எல்லாம் தத்ரூபமாகக் கண்முன் வந்து நிற்கின்றன. இயற்கை வர்ணனைகளை அநாயாசமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். ஆரண்யத்தின் காட்சிகள், பஞ்சத்தின் கொடுமை, ஆனந்த மடம், சந்தானர்களின் போர் முதலியவை உயர்ந்த சித்திரங்கள்.*

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# தமிழ் நாட்டுச் சிறு கதைகள்



## தொகுதி I

மஹரிஷி வ.வே.சு. ஐயர்
இயற்றிய
தித்திக்கும் அரிய கதைகள்

'மங்கையர்க்கரசியின் காதல்' முதலியவை

—— சீர்திருத்தின புதிய பதிப்பு ——

இந்நூலைப்பற்றிய சிறப்புரையில், இப் பெரியாரையும், இவரது உயர்ந்த நூல்களையும்பற்றி, (சென்னை அரசாங்க மாஜி முதல் மந்திரி) கனம் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் எழுதுவதைப் படியுங்கள்.

"* நமது பொதுவாழ்வு நல்ல நிலைமை அடைந்து, நாடு சுகமும், கௌரவமும் பெறவேண்டின், மக்களுடைய நடை குணங்கள் உயர் வழிப்பட நாம் முயற்சி செய்யவேண்டும். பாலியப் பருவத்தில் எண்ணமும், ஒழுக்கமும், நல்வழியில் அமையச் செய்ய வ. வே. சு. ஐயரவர்கள் எழுதியுள்ள "சிறு கதைகள்" போன்ற புத்தகங்களைப் படித்தல் நல்ல சாதனமாகும். இக்கதைகளை ஒருவன் படித்து புத்தகத்தைக் கீழே வைக்கும் காலத்தில், அவன் மனத்தில் பரிசுத்தமான உணர்ச்சிகளும், உன்னதமான எண்ணங்களும் ததும்பும்.

"* ஐயரவர்களின் தைரியத்தையும், தேசபக்தியையும், சத்தியத்தையும், பாராட்டும் ஒவ்வொருவரும் அவர் எழுதிய இக்கதைத் தொகுதிக்கு ஆதரவு அளிப்பார்களென எதிர்பார்க்கிறேன்."

சாதாரணப் பதிப்பு 0—12—0
கலிகோ பயிண்ட் செய்தது 1— 0—0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறு கதைகள் — தொகுதி II

சென்னை அரசாங்க மாஜி முதல் மந்திரி

═══ ராஜாஜி எழுதிய ═══

# குட்டிக் கதைகள்

இந்நூலில் அடங்கியவை :—

(1) தேவானை
(2) அன்னையும் பிதாவும்
(3) திக்கற்ற பார்வதி
(4) ஜகதீச சாஸ்திரிகள் கனவு
(5) அறியாக் குழந்தை
(6) முகுந்தன்
(7) தீபாவளியில் தேவ தரிசனம்
(8) எலக்ஷன் கதை
(9) சோதிடம் பொய்யாகுமா ?
(10) வேணுகானம்
(11) பட்டாசுக் கட்டு

நல்ல காகிதத்தில், பெரிய எழுத்துக்களில் அழகாய் அச்சிடப்பட்டது. உங்கள் பிரதிக்கு உடனே எழுதிக்கொள்ளுங்கள். விலை அணா 12.

ஷை புத்தகம் கலிகோ பயிண்ட் விலை ரூபா. 1.

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

தமிழ் நாட்டுச் சிறு கதைகள் } தொகுதி III

ஸ்ரீ த. நா. குமாரசுவாமி, பி. ஏ., இயற்றியவை.

# க ன் யா கு மா ரி

## முதலிய கதைகள்

### சுவை ததும்பும் பதினொரு கதைகள் கொண்டது

(1) கன்யா குமாரி
(2) ராமராயன் கோவில்
(3) மணிச்சுடர்
(4) வேதாச்ரமம்
(5) ஸ்ரீசைலம்
(6) வைணிகர்
(7) குரூர உலகம்
(8) சட்டப் பரீக்ஷை
(9) தீபாவளி தந்தி
(10) தெய்வ சங்கல்பம்
(11) கண் இழந்த காதல்

### ஒவ்வொரு கதைக்கும் சித்திரப் படம் உண்டு.

*ஏற்கனவே, ஸ்ரீ குமாரசுவாமி, பி. ஏ., அவர்கள்* விஷ விருக்ஷம், ஆனந்தமடம், மாதங்கினி, ஸௌதாமினி *முதலிய நூல்களை, வங்காளியிலிருந்தே இனிய தமிழில் மொழிபெயர்த்து, தமிழ் அபர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.*

*மேற்கண்ட கதைகளில், ஒவ்வொன்றும் மிகவும் அருமையானது; படிக்கப் படிக்க மிக்க ருசி ஊட்டுவது. உங்கள் பிரதிக்கு, சிறிதும் தாமதியாது உடனே எழுதிக்கொள்ளுங்கள்.*

சாதா பைண்ட் அணா 12 :: கலிகோ பைண்ட் ரூ. 1

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

# சந்தனக் காவடி

## முதலிய கதைகள் - தொகுதி IV

| | | |
|---|---|---|
| சாதாரண பைண்ட் அணு 12 | தி. ஜ. ர. இயற்றியவை<br>இந்நூலைப்பற்றிய சிறப்புரைகள் | கலிகோ பைண்ட் ரூபா. 1 |

பாரதமணி :—நம் நாட்டு வாழ்க்கையின் அழகான அம்சங் களை ஆராய்ந்து இனிய நடையில் சித்திரங்கள் சிருஷ்டி செய்யும் சக்தி பெற்றவர் தி. ஜ ர. என்பதற்கு இப்புத்தகத்தில் பரிபூரண அத்தாட்சி இருக்கிறது.

தாருல் இஸ்லாம் :—உயிருள்ள இச்சிறு கதைகள் மூலம் இதன் ஆசிரியர் மனித வாழ்வையே சித்திரித்துள்ளதுடன், வாழ் வின் உயர்வைக் கதைகளின் மூலம் சமூகத்தினருக்குப் புலப் படுத்துகிறார்.

சித்ரவாணி :—கரடு முரடற்ற இலகுவான நடை ; தெளிவு நிறைந்த விகாசம் ; சிந்தனையைத் தூண்டும் கருத்துகள் ; இவை தாம் அவர் கதைகளுக்குள்ள விசேஷ யோக்கியதைகள்.

கலைமகள் :—ஒவ்வொன்றும் நெஞ்சை அள்ளும்படியாக அமைகின்றது. சுவை ததும்பும் அபூர்வ இலக்கிய சிருஷ்டிகள்.

குமரன் :—நம் நாட்டு வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இக் கதைகள், இனிய தெள்ளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

ஊழியன் :—தமிழர்கள் படிக்கவேண்டிய கதைகள்.

சுதேசமித்திரன் :—கதைகள் யாவும் ஸ்வாரஸ்யமாய்ப் பின்னப்பட்டிருக்கின்றன.

மணிக்கொடி :—தி. ஜ. ர-வின் கதைகள் ஒவ்வொன்றும் ஓர் அழகிய உண்மை.

ஹிந்துஸ்தான் :—சிறப்பான தமிழ்க் கதைகள்.

ஹனுமான் :—இக்கதைகள் தமிழில் சிரஞ்சீவித் தன்மை பெறக்கூடியவை.

தினமணி :—எட்டுக் கதைகளும் வாசித்து அனுபவிக்க வேண்டியனவே.

சினிமா உலகம் :—ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு தனிச் சுவையை அள்ளித் தருகின்றது.

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறு கதைகள் தொகுதி V

# சக்ரவாகம்

## முதலிய கதைகள்

ஸ்ரீ ந. சிதம்பர சுப்பிரமணியம்
அவர்கள் எழுதியவை

இந்நூலில் உள்ள கதைகள்


1. சக்ரவாகம்
2. ஊர்வலத்தில்
3. ரகுபதியின் அவஸ்தை
4. லக்ஷ்யவாதி
5. காம தகனம்
6. நாடோடி நண்பர்கள்
7. என்று வருவானோ?
8. அமரன்
9. வேலையும் விவாகமும்
10. சிதைந்த சுவர்க்கம்
11. அன்னதான சமாஜம்
12. நிழலாட்டம்
13. பாட்டி
14. ஜாகை மாற்றம்
15. தரிசன தாகம்
16. விஷ கன்னிகை
17. தாய் நக்ஷத்திரம்


சாதாரண பைண்ட் **0-12-0** கலிகோ ரூ. **1-0-0**


அலையன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

தமிழ்நாட்டுச் சிறு கதைகள்—தொகுதி VI

# கனகாம்பரம்

## முதலிய கதைகள்

கு. ப. ராஜகோபாலன், பி. ஏ.,
எழுதியவை

### இதில் அடங்கியவை

| | |
|---|---|
| 1. கனகாம்பரம் | 11. ஸ்டூடியோ கதை |
| 2. நூர் உன்னிஸா | 12. வீரம்மாளின் காளை |
| 3. புரியும் கதை | 13. உயிரின் உழைப்பு |
| 4. பண்ணைச் செங்கான் | 14. திரை |
| 5. தாய் | 15. விசாலாட்சி |
| 6. விடியுமா ? | 16. வாழ்க்கைக் காட்சி |
| 7. பெண் மனம் | 17. குரலும் பதிலும் |
| 8. அடிமைப் பயல் | 18. சிறு கதை |
| 9. புதிர் | 19. மின்னக் கலை |
| 10. தவறுகளோ, தன்மைகளோ ! | 20. காதலே சாதல் |
| | 21. எதிரொலி |

சாதாரண பைண்ட் விலை அணா 12 : : கலிகோ பைண்ட் விலை ரூபா. 1.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# ஸேவாஸதனம்

கவி சக்ரவர்த்தி ப்ரேம சந்த் ஹிந்தியில் எழுதியதை ஸ்ரீமதி அம்புஜம்மாள் சிறப்பாய் மொழிபெயர்த்தது.

பிரேம் சந்தின் நவீனங்கள் பல உள்ளன. அவற்றுள், "ஸேவாஸதனம் மிகவும் சிறப்புற்றது என்பது இலக்கிய அன்பர்களின் கருத்து."

விலை ரூ. 1—4—0

பொருளடக்கம்

(1) சர்மாவின் சங்கடம், (2) லஞ்சத்தின் வஞ்சம், (3) கலியாணமும் குடித்தனமும், (4) தாசிவீட்டில் கச்சேரி, (5) ஆசார அனுஷ்டானம், (6) பூந்தோட்டம் - புதிய நட்பு, (7) தீபாவளி இரவு, (8) அபவாத வம்பு, (9) தாசி வீட்டில் அடைக்கலம் (10) மோஹன் வரவு, (11) டால்மண்டி வீதி, (12) மோகன் படிப்பு, (13) நவரத்தின மாலை, (14) விட்டல்தாஸின் போதனை, (15) சுமதியின் நிபந்தனை, (16) மாலை அகப்பட்டது, (17) மீட்கப்பட்டாள், (18) சாஸ்திரியும் சந்நியாசியும், (19) மோஹன் திரும்பினான், (20) இன்ஸ்பெக்டர் விடுதலை, (21) சாந்தை கல்யாணம், (22) சர்மாவின் சங்கல்பம், (23) தந்தையும் இறந்தார், (24) அக்காளும் தங்கையும், (25) காதல்பிச்சை வேண்டாம், (26) கரையேற வழி, (27) சாந்தையின் சோகம், (28) வெளியேறிய காரணம், (29) அண்ணாவின் கோபம், (30) உமாபதியின் உபதேசம், (31) பிரிந்தவர் கூடினர், (32) தீன ஜன ஸேவை.

சில முக்கிய அபிப்பிராயங்கள்

நவசக்தி :— இப்புத்தகம் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பும் தெளிவாய் இருக்கிறது. ப்ரேம் சந்தின் நவீனங்களிலே மிகச் சிறந்தது, "ஸேவாஸதனம்". இது அழகாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

கலைமகள் :— * மூலத்தின் சுவை குன்றாமல் வெளியிடப்பட்டிருக்கிறது. மொழி பெயர்த்தவர் ஹிந்தியில் மிக்கத் தேர்ச்சி பெற்ற ஸ்ரீமதி அம்புஜம்மாள் என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்; இந்த மொழிபெயர்ப்பிலும் அவரது திறமை நன்கு வெளியாகின்றது.

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# இந்திரா

ஆசிரியர்: ஸ்ரீ பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர்
மொழிபெயர்ப்பாளர்: ஸ்ரீ எஸ். குருஸ்வாமி, பி. ஏ.

—— விலை அணு 12 ——

முதற் பதிப்பு வெளிவந்து 3-மாதங்களுக்குள், பூராப் பிரதிகளும் செலவாகிவிட்டன வெனில், இந்நூலின் உயர்வைப் பற்றி விவரிக்கவும் வேண்டுமோ?

## பொருளடக்கம்

1. மாமனார் வீட்டிலிருந்து அழைப்பு; 2. கள்வரிடம் சிக்குதல்; 3. புலி! புலி!; 4. அந்தப் புரோகிதர்; 5. கல்கத்தா; 6. ஸுபாஷிணி; 7. சமையல் தொழில்; 8. குமுதத்தின் சமையல்; 9. இளமை மோகம்; 10. இரண்டு கடிதங்கள்; 11. விருந்தாளி; 12. சந்திக்க ஏற்பாடு; 13. பாடம் கற்றல்; 14. சந்திப்பு; 15. பரீட்சை; 16. பரீட்சை முடிந்தது; 17. பிரிவின் சாயல்; 18. மாயாவினி; 19. வித்யாதரி; 20. சாப விமோசனம்; 21. அகப்பட்டுக்கொண்டார் அம்மாஞ்சி; 22. நன்றி செலுத்தல்.

## சித்திரங்கள்

1. இந்திரா திருடர்களிடமிருந்து தப்பி, இலை தழைகளை ஆடையாக அணிந்து வெளிவருதல்.-அட்டைப் படம்
2. பங்கிம் சந்த்ர சட்டோபாத்தியாயர் - முகப்புப் படம்
3. இந்திரா மூடுபல்லக்கில் கணவன் வீடு செல்லுதல்
4. இந்திரா, தன் கணவருக்கும் உ-பாபுவுக்கும் பரிமாறுதல்
5. இந்திரா ஸுபாஷிணி சந்திப்பு.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

# கிருஷ்ணகாந்தன் உயில்

**பங்கிம் சந்த்ரர் முதல்தர நாவல்களுள் ஒன்று.**

வங்க மூலத்திலிருந்து மொழிபெயர்த்தவர்கள்

1. பண்டித ஸ்ரீசைல தாதாசாரியாரும்
2. த. நா. குமாரசுவாமி, பி. ஏ., அவர்களும்.

## பொருளடக்கம் - முதல் பாகம்

(1) பாகப் பிரிவினை (2) ஹரலாலின் சூழ்ச்சி (3) ரோஹிணி உதவி மறுத்தல் (4) அபினி மயக்கம் (5) ஹரலாலின் வெற்றி (6) ரோஹிணியின் பரிதாப நிலை (7) ரோஹிணியின் சோகம் (8) சுமதி குமதி சம்வாதம் (9) ரோஹிணி கற்பனை உயிலை எரித்தல் (10) ப்ரமரை ரோஹிணியைச் சந்தேகித்தல் (11) ரோஹிணியை ப்ரமரையிடம் ஒப்பித்தல் (12) ரோஹிணி கோவிந்தலாலை நேசித்தல் (13) கோவிந்தலால் பெரியப்பனைச் சந்தித்தல் (14) ப்ரமரையின் பொறுமை (15) ரோஹிணி குளத்தில் விழுதல் (16) ரோஹிணியை உயிர்ப்பித்தல் (17) ரோஹிணியின் மனப்பான்மை (18) பரிமளாவின் விசாரம் (19) கோவிந்தலால் பந்தர்காலிக்குப் புறப்படுதல் (20) ப்ரமரையின் மனவேதனை (21) ப்ரமரையின் சோகம் (22) ரோஹிணி ப்ரமரையைச் சந்தித்தல் (23) ப்ரமரையின் கடிதம் (24) கிருஷ்ணகாந்தனது மனக்குழப்பம் (25) கோவிந்தலால் ரோஹிணியிடம் ஈடுபடுதல் (26) கிருஷ்ணகாந்தன் மரணம் (27) கிருஷ்ணகாந்தன் மரணத்துக்குத் துக்கித்தல் (28) ப்ரமரை மன்னிப்புக்கேட்டல் (29) குமதி, சுமதி சம்பாஷணை (30) கோவிந்தலால் காசிக்குப் புறப்படுதல் (31) ப்ரமரையின் பிரலாபம்.

## பொருளடக்கம் - இரண்டாம் பாகம்

(1) முதல் வருஷம் (2) ப்ரமரையின் தகப்பன் (3) புலம் விசாரித்தல் (4) துப்புத் துலக்கல் (5) கேளீஸதனம் (6) எண்ணச் சுழல் (7) சூழ்வினைப் படலம் (8) குறியிடம் காணல் (9) ரோஹிணிக்கு வந்த யமன் (10) இரண்டாவது வருஷம் (11) மூன்றாவது வருஷம் (12) ஐந்தாவது வருஷம் (13) ஆறாவது வருஷம் (14) அணையும் விளக்குச் சிரித்தது (15) நாடகத்தின் முடிவு (16) முடிவுரை.

| | |
|---|---|
| அட்டை பைண்ட் | 1—8—0 |
| கலிகோ பைண்ட் | 1—12—0 |

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.**